# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

சகோ. காலேப் யோசுவா
**Tele :** 954630 - 256157

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601.
தூத்துக்குடி மாவட்டம்.

# சகோதர சிநேகம்
## Brotherly Love

1. கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கு: தேவனுடைய சுவிசேஷத்துக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனாகிய நான் இந்தக்கூடாரத்தில் இருக்குமளவும் வேதவாக்கியங்களுக்கும், இந்தச்சபைக் காலத்துக்குரிய செய்திக்கும் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது பரிசுத்தஆவிக்கு பிரியமானதாயிருக்குமென்று எண்ணுகிறேன்.
நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. ஒரே மனுஷனுடைய (ஆதாம்) கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டார்கள். அந்த ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது. இப்படியாக அந்த ஒரே மனுஷனுடைய மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. ஆனால் இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன், அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாய் இருந்த நாம் கெட்டுப்போகாமல் தம்முடைய ஜீவனில் பங்குகொள்ளும்படி, அதாவது நாம் நித்திய ஜீவனை அடையும்படிக்கு தம்முடைய ஒரே பேரான குமாரனை உலகம் இரட்சிக்கப்படுவதற்காக தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். கிறிஸ்து நமக்காக தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தது போல, **நாமும் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்க வேண்டும் என்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது**.ரோ.5:19,12,16; எபே.2:1; யோ.3:16; எபே.5:2.

3. சகோதர சிநேகத்திலே ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருங்கள். ரோ.12:10. Be kindly affectioned one to another with brotherly love. அவன்/அவள் ஒரு கிறிஸ்தவன்/கிறிஸ்தவள் என்பதற்கு அடையாளம் என்ன? **அன்பு**. முதலாம் சபையாகிய எபேசு சபைக்காலத்தில் (கி.பி.53-170) அதன் செய்தி **விசுவாசமாக** (Faith) இருந்தது. இரண்டாவது சபையாகிய சிமிர்னா சபைக்காலத்தில் (கி.பி.170-312) அதன் செய்தி **தைரியமாக** (Virtue) இருந்தது. அவ்வண்ணமாகவே மூன்றாவது பெர்கமு சபைக்காலத்தில் (கி.பி.312-606) அதன் செய்தி **ஞானம்** (Knowledge) ஆக இருந்தது. நான்காவது சபையாகிய தியத்திரா சபைக் காலத்தில் (கி.பி.606-1520) அதன் செய்தி **இச்சையடக்கம்** (Self control) ஆகவும், ஐந்தாவது சபை சர்தையின் காலத்தில் (கி.பி.1520-1750) அதன் செய்தி **பொறுமை** ஆகவும் (Patience) இருந்தது. ஆறாவது சபை பிலதெல்பியாவின் காலத்தில் (கி.பி.1750-1906) அதன் செய்தி **தேவபக்தி** ஆகவும் (Godliness) இருந்தது. இப்பொழுது நாம் ஜீவிக்கும் இந்தக் கடைசிக்காலச் சபையாகிய லவோதிக்கேயாவின் (கி.பி.1906ல் ஆரம்பமாயிற்று, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எடுத்துக்கொள்ளப்படும் போது இதன் காலம் முடிவுபெறும்) செய்தி **சகோதர சிநேகம்** ஆக (Brotherly love) இருக்கிறது.

4. ஆக கிறிஸ்துவின் சரீரம் எபேசு சபைக்காலத்தில் **விசுவாசத்தில்** கட்டப்பட்டு, சிமிர்னா சபைக்காலத்தில் விசுவாசத்தோடே **தைரியத்தையும்**, பெர்கமு சபைக்காலத்தில் தைரியத்தோடே **ஞானத்தையும்**, தியத்திரா சபைக்காலத்தில் ஞானத்தோடே **இச்சையடக்கத்தையும்**, சர்தை சபைக்காலத்தில் இச்சையடக்கத்துடன் **பொறுமையையும்**, பிலதெல்பியா சபைக்காலத்தில் பொறுமையுடன் **தேவபக்தியையும்**, இந்த லவோதிக்கேயா சபைக்காலத்தில் தேவபக்தியோடே **சகோதர சிநேகத்தையும்** கூட்டி வழங்கும் போது கிறிஸ்து உண்மையான பரிசுத்தஆவியின் அபிஷேகத்தின் மூலம் அதன் மேல் வருகிறார். **பரிசுத்தஆவியே தேவஅன்பு**.2பேது.1:5-9. இந்த சுபாவங்கள் உன்னில் முத்தரிக்கப்படும் போது தேவன் உன்னில் ஜீவித்து, உன்னை என்றென்றைக்கும் ஜீவிக்கிற தேவனின் வாசஸ்தலமாக மாற்றுகிறார். இச்சுபாவங்களை ஒரு மனிதன் சுதந்தரிக்கும் போது அவன் ஒரு பரிபூரணமான தேவமனிதனாகிறான். இவ்வாறாக தனிப்பட்ட ஒவ்வொருவரையும் அவர் குமாரராகவும், குமாரத்திகளாகவும் மணவாட்டிக்குள்ளாகக் கொண்டு வருகிறார்.

5. **பெந்தெகொஸ்தே நாள் உற்பத்தி செய்த சகோதர சிநேகம், லவோதிக்கேயா சபையின் செய்தியாக இருக்கிறது. சகோதர சிநேகம் என்றால் என்ன? நீ உன்னிடத்தில் அன்பு கூறுகிறதுபோல பிறனிடத்தில் அன்புகூறுவதே சகோதர சிநேகம்.** மாற்.12:31. **அதாவது ஒரு சகோதரனுடைய காரியத்தில் உன்னை அவனுடைய நிலையில் வைத்துப் பார்ப்பதே சகோதர சிநேகம். அதாவது மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளையே நீங்களும் அவர்களுக்குச் செய்வதே சகோதர சிநேகம்.** மத்.7:12. நான் மூன்று நேரம் திருப்தியாக சாப்பிடுவது போன்று என் சகோதரனும் சாப்பிட வேண்டும், நான் குளிர்சாதன அறையில் தூங்குவது போன்று என் சகோதரனும் தூங்க வேண்டும், நான் காரில் செல்லுவது போன்று எனது சகோதரனும் செல்ல வேண்டும். இந்த மனப்பக்குவத்தை கிரியையில்

வெளிப்படுத்துவதே ஒருவன் தன்னிடத்தில் அன்புகூறுவது போல பிறனிடத்திலும் அன்புகூறுவதாகும். பவுல், பேதுருவினிடத்தில் கடன்பட்டிருந்தான். பவுலுக்குக் கடனைத் தீர்க்க நிர்வாகம் இல்லை. பேதுரு, பவுல் பட்ட முழுக்கடனையும் மனப்பூர்வமாக மன்னித்துவிட்டான். இப்படியிருக்க பவுலும், யோவான் தன்னிடம் பட்ட கடனை கட்டித் தீர்க்க நிர்வாகம் இல்லாத நிலையில் இருப்பதால், யோவான் பட்ட கடனை மனப்பூர்வமாக மன்னிக்க வேண்டும். இது தான் மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்கிறதாகும். தன்னைப் போல் பிறனையும் நேசிக்கிறதாகும். பளிங்குக்கல் வீட்டில் இருக்கும் பாஸ்டர் தனக்கு தசமபாகம், காணிக்கைக் கொடுத்து ஆதரிக்கும் விசுவாசிகளும் பளிங்குக்கல் வீட்டில் இருக்க வேண்டும் என வாஞ்சிக்க வேண்டும். தசமபாகம், காணிக்கை கொடுக்கிறவன் குடிசையிலும், அவற்றை அனுபவிக்கும் பாஸ்டர் பளிங்குக்கல் வீட்டிலும் வாழ்வது எப்படி சகோதர சிநேகத்தைக் கொண்டுவரும்? வெளிப்படுத்தும்?

6. ஒருநாள் தாவீது, தன் வீட்டிலே வாசமாயிருக்கிறபோது, அவன் தீர்க்கதரிசியாகிய நாத்தானிடம் சென்று, பாரும்! நான் கேதுருமரம் வீட்டிலே வாசம் பண்ணுகிறேன்; கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியோ திரையின் கீழ் இருக்கிறது. இது எப்படி நியாயம்? நான் கர்த்தர் வாசமாயிருக்க ஒரு ஆலையத்தைக் கட்டப்போகிறேன் என்றான். அதுதான் சிநேகம், அவன் தேவன் மீது வைத்த அன்பு. தேவன் தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்துச் சாட்சிக் கொடுத்தார். அப்.13:20. ஒருவர் பங்களாவில் ஆடம்பரமாக வாழ்ந்துகொண்டு, கர்த்தருடைய ஊழியத்தைத் தாங்க, ஊழியக்காரனைத் தாங்க பணம் இல்லையென்று கூறினால் அது எப்படி நியாயம்? அது எப்படி அவன் தேவனிடத்தில் முழு இருதயத்தோடும் அன்புகூறுவதாகும்? சென்னை, VOGR ல், எவ்வளவோ ஆடம்பர, அநாவசியச் செலவுகள் செய்கிறார்கள். ஆனால் அங்கு வெளியூர்களிலிருந்து வந்துசெல்லும் ஊழியக்காரர்கள் ஓரிரு லோக்கல் போன் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனென்றால் அந்தச் செலவுகள் அவர்களுக்குப் பொருளாதார நெருக்கடியைக் கொண்டுவருகிறதாம். ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். மாதம் குறைந்தபட்சம் ரூ.20,000/- வருமானம் உள்ளவர், தனது குடும்பத்தில் உள்ள அனைவர்கள் பெயரிலும் வங்கியில் ஆர்.டி.அக்கவுண்டில், எல்.ஐ.சி.யில் பணத்தைச் சேமித்துவிட்டு, தன்னிடம் வரும் ஊழியக்காரர்களுக்குக் கொடுக்க ரூ.100/-க்கு கஷ்டம் என்றால், அவரிடத்தில் சகோதர சிநேகம் எங்கு உண்டு? இக்காலத்துக்குரியச் செய்தியில் உள்ளவர்கள் மத்தியில் சகோதர சிநேகம் வெறும் வாய்ப்பேச்சிலே உள்ளது. கிரியைகளில் காணோம்.

7. **சகோதர சிநேகம் தேவை. சகோதர சிநேகத்தைக் குறித்து நான் உங்களுக்கு எழுத வேண்டியதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்கும்படிக்குத் தேவனால் போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்கள்.** 1தெச.4:9.
சகோதர சிநேகம் நம் மத்தியில் ஏன் தேவை?

அ) **சகோதர சிநேகம் நாம் நித்தியஜீவனை சுதந்தரித்துக்கொள்ளத் தேவை.** நாம் சகோதரனிடத்தில் அன்புகூறுகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம். சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்தில் நிலைகொண்டிருக்கிறான். தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான். மனுஷ கொலைபாதகன் எவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது. 1யோ.3:14,15.

ஆ) **சகோதர சிநேகம் நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளரத் தேவை.** உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், ஞானத்தையும், இச்சையடக்கத்தையும், பொறுமையையும், தேவபக்தியையும், **சகோதர சிநேகத்தையும்**, அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. 2பேது.1:5-9. வீட்டில் தயாரிக்கும் சாம்பார் சுவையாக இருக்க அதில் பலவிதமான மசாலா பொடிகள், காய்கறிகள், பருப்பு வகைகள் யாவும் தகுந்த அளவில் சேர்க்கப்படவேண்டும். அப்பொழுதுதான் அது ருசியாக இருக்கும். அதுபோல ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளர அவனிடம் இதர பண்புகளுடன் சகோதர சிநேகமும் காணப்பட வேண்டும். ஒருவனிடத்தில் சகோதர சிநேகம் இல்லையென்றால் அவன் கிறிஸ்துவை அறிகிற அறிவில் இன்னும் வளரவில்லை, குறைவுள்ளவனே.

இ) **சகோதர சிநேகம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெறத் தேவை.** இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் இன்பமுமானது. அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசிர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார். சங்.133:1,3. முதலாம் சபை தொடக்கக் காலத்தில் விசுவாசிகளாகிய திரளானக் கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகள் ஒன்றையும் தன்னுடையது என்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது. அவனவனுக்குத் தேவையானதுக்குத்தக்கதாக பகிர்ந்துக் கொடுக்கப்பட்டது; அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. அவர்கள் எல்லார்மேலும் பூரணக்கிருபை உண்டாயிருந்தது. அப்.4:32-35. இதென்ன? இது தான் சகோதர சிநேகம்.

ஈ) **தேவன் ஒளியாயிருக்கிறார். அவர் ஒளியில் இருக்கிறதுபோல நானும் ஒளியிலே நடக்கிறேன் என்று ஒருவன் சாட்சிபகிர நம் மத்தியில் சகோதர சிநேகம் தேவை.** அவர் ஒளியில் இருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரிலொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். 1யோ.1:5-7. நம் மத்தியில் சகோதர சிநேகத்தை, ஐக்கியத்தை உருவாக்க ஊழியர்கள் கூட்டம் தேவையில்லை. ஊழியர்கள் மத்தியில் ஐக்கியம் ஏற்படுத்தப்போகிறேன் என்று பலர் முயற்சித்தார்கள். அப்படி முயற்சித்தவர்கள் எல்லாரும் இன்று எங்கிருக்கிறார்கள் எனத் தெரியவில்லை. பாஸ்டர் ஜான்சாமுவேல் நடத்தும் ஊழியர்கூட்டம் ஒன்றுக்கும் உதவாது. அவர் அதை தனது பெருமைக்காகவே கூட்டுகிறார். நமக்குள் ஐக்கியத்தை உருவாக்க நாம் முயற்சி எடுக்க வேண்டிய தேவையேயில்லை. நாம் ஒவ்வொருவரும் ஒளியில் நடக்கிறவர்களாயிருப்போமானால் நமக்குள் ஐக்கியம் தானாகவே ஏற்பட்டுவிடும். இன்று ஊழியர்கள் நீதியின் ஊழியக்காரர்களாயிராமல், ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்தவர்களாயிருப்பதால்

அவர்கள் மத்தியில் கிறிஸ்துவின், பரிசுத்தவான்களின் ஐக்கியம் இல்லை. ஆவியில் ஒருமனப்பட்டவர்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி தங்கள் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்வதில் தவறில்லை.

8. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள்; நான் உங்களில் அன்பாய் இருக்கிறதுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாய் இருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள். யோ.13:34,35. அதாவது கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் மத்தியில் காணப்படும் அன்பைக் கண்டு, பிறர் இவர்கள் கிறிஸ்துவினுடைய சீஷர்கள் என்று அறிந்துகொள்ள வேண்டும். அதாவது அவர்களுடைய கனி அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதை வெளிப்படுத்த வேண்டும். இவர்கள் மத்தியில் காணப்படும் சிநேகம்/அன்பு இவர்களைக் குறித்து சாட்சியிட வேண்டும். உதாரணமாக அன்று, பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு இயேசு கொண்டுபோகப்பட்டபோது, பேதுரு ஆசாரியினுடைய அரண்மனை முற்றத்தில் உட்காந்திருந்து, இயேசுவுக்கு ஏற்படும் முடிவை பார்க்கும்படி சேவகர்களோடே உட்காந்திருந்தான். அங்கு இருமுறை இயேசுவை அறிந்ததை மறுதலித்தான். மூன்றாவது முறையாக அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து **மெய்யாகவே நீயும் அவர்கள் ஒருவன், உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது** என்றார்கள். பாருங்கள், பேதுருவினுடைய பேச்சு, அவன் இயேசு கிறிஸ்துவோடு கூட இருந்தவன் என்று சாட்சி கொடுத்தது. மத். 26:57-73. அவ்வண்ணமாகவே நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதைக் கண்டு பிறர் இவர்கள் கிறிஸ்துவினுடைய சீஷர்கள், ஊழியர்கள், விசுவாசிகள் என்று சாட்சி கொடுக்க வேண்டும். உங்கள் நடக்கைகளை, உங்கள் கிரியைகளை, உங்கள் கனிகளைப் பார்த்த ஒருவர், உங்களை அறியாத நிலையில், அவர் உங்களைக் குறித்து இவர் கிறிஸ்தவர் என்று இவரது கிரியைகள் வெளிப்படுத்துகிறதே என்று சாட்சி கொடுக்க வேண்டும்.

9. இயேசு: நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்க வேண்டும் என்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதனுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவனிடத்திலும் இல்லை என்றார். யோ.15:12,13. கிறிஸ்து சிலுவையில் நமக்கென்று சாபமாகி, நம்மை நியாப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து மீட்டார். இவ்வாறாக கிறிஸ்து சிலுவையின் மூலமாக நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். கலா.3:13, ரோ.10:4. நியாயப்பிரமாணத்துக்கு மரிப்பதென்றால் நியாயப்பிரமாணமின்றி வாழ்வதல்ல. கிறிஸ்துவின் பிரமாணத்துக்கு உட்பட்டிருப்பதாகும். 1கொரி.9:21. கிறிஸ்துவின்பிரமாணம் என்ன? நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாய் இருக்கவேண்டும் என்பதே. யோ.15:12. **அன்பு ராஜரீகப் பிரமாணம்.** யாக்.2:8. **அன்பு: இதற்குள் நியாப்பிரமாணம் முழுவதும் அடங்கியிருக்கிறது.** ரோ.13:9. இயேசு கிறிஸ்துவினுடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவஅன்பு மெய்யாய்ப் பூரணப்பட்டிருக்கும். நாம் அவருக்குள் இருக்கிறோம் என்பதை அதினாலே அறிந்திருக்கிறோம். அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும். 1யோ.2:5,6. ரூத்க்கு தன் மாமியாகிய நகோமியிடத்தில் உள்ள அன்பைக் கவனியுங்கள். அவள் தன் மாமியிடம் நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன், நீர் மரணமாகும் இடத்தில் நானும் மரணமடைந்து அங்கே அடக்கம் பண்ணப்படுவேன். மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள். ரூத்.1:16,17. மாமிக்கும் மருமகளுக்குமிடையில் உள்ள இந்த சிநேகத்தை, அன்பை நாம் கடைசிக்காலச் செய்தியில் இருக்கிறோம் என்பவர்கள் குடும்பங்களில் காணமுடியுமா? முடியும். ஆனால் அது தேவனுடைய வித்துக்களின் மத்தியில்.

10. தமது ஒரே பேறான குமாரனை தந்ததினால் கடவுள் நமக்குக் காண்பித்த அன்பு அகப்பே. யோ.3:16. பிதா உலக தோற்றத்திற்கு முன் குமாரனில் கூர்ந்த அன்பு அகப்பே. யோ.17:24. அகப்பே ஒரு உணர்ச்சியோ, மனஎழுச்சியோ அன்று. அன்புகூறப்படும் பொருளில் அழகையோ, விரும்பத்தக்க தேவையான யாதொன்றையும் அது எதிர்பார்க்கிறதில்லை. மற்றவர்களின் தேவைகளை பற்றி மாத்திரமே கவலைப்படுகிறது. வாங்கிக்கொள்ளவோ, வைத்துக்கொள்ளவோ அது வகைத்தேடாமல் கொடுக்கவே முன் வருகிறது. அகப்பே என்ற சொல்லின் பொருளைக்காட்டும் சிறந்த பகுதி மத்.5:37-48 ஆகும். கைமாறு எதையும் எதிர்பாராமல் காட்டும் அன்பு அகப்பே. திரும்பித் தரப்படும் என்ற நம்பிக்கையற்ற இடத்தில் அவன் கடன்கொடுக்கிறான். தன்னை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்கிறான். தன்னை துன்பப்படுத்துபவர்களுக்காக ஜெபம் செய்கிறான். லூக்.6:27, மத்.5:44.

11. மேலும் இங்கு ஒரு சம்பவத்தைக் கவனியுங்கள். தங்கள் பிராணனை எண்ணாமல் போய், பெலிஸ்தரின் தானையம் இருந்த பெத்லகேமின் ஒலிமுக வாசலில் இருக்கிற கிணற்று தண்ணீரை தாவீதின் தாகத்துக்காக கொண்டுவந்த மூன்று பராக்கிரமசாலிகள் தாவீதின் மீது வைத்திருந்த அன்பில் காணலாம். இவர்கள் பெலிஸ்தரின் பாளயத்திற்குள் துணிந்து புகுந்துபோய் தாவீதின் தாகத்துக்கு தண்ணீர் கொண்டு வந்தார்கள். இவர்களைக் குறித்து தாவீது, தங்கள் பிராணனை எண்ணாமல் போய் தண்ணீர் கொண்டு வந்த இந்த மனுஷரின் இரத்தத்தைக் குடிப்பேனோ என்று சொல்லி, அதை கர்த்தருக்கென்று ஊற்றிப்போட்டான். 1நாளா.11:16-19. தங்கள் ராஜாவின் தண்ணீர் தாகத்துக்காக, தங்கள் ஜீவனை வெறுத்து, தங்கள் அன்பை கிரியையில் வெளிப்படுத்தினார்கள். அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம். 1யோ.3:16.

12. இயேசுவுக்கும், லாசருக்கும் இடையில் உள்ள சிநேகத்தைப் பாருங்கள். இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரியிடத்திலும், லாசருவிடத்திலும் அன்பாய் இருந்தார். லாசரு மரித்தான். இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக் கண்டவுடனே அவர் பாதத்தில் விழுந்து; ஆண்டவரே, நீர் இங்கே இருந்திரானால் என் சகோதரன் மரிக்க மாட்டான் என்றாள். அவள் அழுகிறதையும், அவளோடே

கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கி துயரம் அடைந்தார். இயேசு கண்ணீர் விட்டார். இதன்மூலம் இயேசு லாசருவை எவ்வளவாய் சிநேகித்தார் என்பதை வெளிப்படுத்தினார். யோ.11அதி. இன்றோ ஊழியக்காரன் என்று தன்னை அழைத்துக் கொள்கிறவன் ஒருவன் இறந்துவிட்டான் என்ற வதந்தியை நம்பியே, அவன் இறந்தது நலமாய் போய்விட்டது எனக் கூறி மனமகிழ்ச்சிக் கொள்கிறான். சகோதரனே, அவன் மரிப்பது உனக்கு நலமாய் இருக்குமானால், உன் வாஞ்சையைக் கர்த்தர் நிறைவேற்றுவாராக.

13. தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோவின் சிநேகத்தைப் பாருங்கள். ராஜாவாகிய நேபுகாத் நேச்சார், தானியேலை பெரியவனாக்கி, அவனை பாபிலோன் மாகாணம் முழுவதற்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான். இந்நிலையில் தானியேல் தன் நண்பர்களை மறக்கவில்லை. தானியேல் ராஜாவை வேண்டிக்கொண்டதின் பேரில் அவன் சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நெகோவையும் பாபிலோன் மாகாணத்தின் காரியங்களை விசாரிக்கும்படி வைத்தான். தானி.2:48,49. தானியேல் தன் சகோதர சிநேத்தை வெளிப்படுத்தினான். இன்று குடும்பங்களிலும், ஊழியங்களிலும் பாருங்கள், மேலான நிலையில் உள்ளவர்கள், தங்களைவிடத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு உதவ முன்வருகிறதில்லை. ஏன்? தாழ்ந்தநிலையில் உள்ளவன் தன்னைப்போல் உயர்ந்தநிலைக்கு வந்துவிடக் கூடாதே என்ற பொறாமையினாலே! பொறாமையே சகோதர சிநேகத்தைச் சீர்குலைக்கிறது, வளரவிடாமல் தடைசெய்கிறது.

14. தாவீது, யோனத்தான் சகோதர சிநேகத்தைப் பாருங்கள். யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இணைந்திருந்தது. யோனத்தான், தாவீதை தன் உயிர்போல் சிநேகித்தான். யோனத்தானுடைய மரணத்தை அறிந்த தாவீது அவன் மீது புலம்பல் பாடி: என் சகோதரனாகிய யோனத்தானே! உனக்காக நான் வியாகுலப்படுகிறேன்; நீ எனக்கு வெகுஇன்பமாயிருந்தாய்; உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது; ஸ்திரீகளின் சிநேகத்தை பார்க்கிலும் அதிகமானது என்கிறான். 1சாமு.18:1-4, 2சாமு.1:26. தாவீது தான் பெண்களிடம் காணும் இன்பத்தைவிட யோனத்தானுடைய சிநேகம் அதிகமானது என்கிறான்.

15. இன்னும் இயேசு கிறிஸ்துவின் சிநேகத்தைப் பாருங்கள். உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். உங்களைச் சிநேக்கிக்கிற வர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? உங்கள் சகோதரனை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறதென்ன? பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தீயோர் மேலும், நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும், அநீதி யுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார். ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரணசற்குணராயிருக்கிறது போல, நீங்கள் பூரணசற்குணராயிருக்கக்கடவீர்கள் என்கிறார். மத்.5:43-48. ஆம் நாம் சத்துருவினிடத்திலும் சகோதர சிநேகத்தை வெளிப்படுத்துகிறவர்களாயிருக்கவேண்டும்.

16. உங்கள் சகோதர சிநேகம் மாயமற்றதாயிருக்க வேண்டும். நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகம் உள்ளவர்களாயிருக்கும்படி, சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூறுங்கள். 1பேது.1:22. யூதாசின் சிநேகத்தைப் பாருங்கள். இயேசுவால் அப்போஸ்தலனாகத் தெரிந்துக்கொள்ளப் பட்டவன். பரலோகராஜ்யம் சமீபத்திருக்கிறது என்று பிரசங்கித்தவன். வியாதியுள்ளவர்களை சொஸ்தமாக்கினான், குஷ்டரோகிகளை சுத்தம் பண்ணினான். மரித்தோரை எழுப்பினான். பிசாசுகளைத் துரத்தினான். ஆனாலும் பிரதான ஆசாரியனிடத்திற்குப் போய், நான் இயேசுவைக் காட்டிக்கொடுக்கிறேன், நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு 30 வெள்ளிக் காசைக் கொடுக்க உடன்பட்டார்கள். அது முதல் அவன் அவரை காட்டிக்கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். மத்.26:15,16. அவன் நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவன் தான், அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். அவன் இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, வாழ்க என்று சொல்லி அவரை முத்தஞ்செய்தான். அப்பொழுது, அவர்கள் கிட்டவந்து, இயேசுவின் மேல் கைபோட்டு, அவரைப் பிடித்தார்கள். மத்.26:48-50. இவ்வாறாக 3 ½ ஆண்டுகள் பரலோகராஜ்யம் சமீபத்திருக்கிறது என்று பிரசங்கித்து அற்புத அடையாளங்களைச் செய்தவன் 30 வெள்ளிக் காசுக்காக இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். அவனுடைய சிநேகம் மாயமுள்ளதாக இருந்தது.

17. இந்நாட்களில் பாஸ்டர்களுக்கு சபையோர் மேலுள்ள சிநேகமும் யூதாசின் சிநேகத்தைப் போன்று மாயமுள்ளதாகவே இருக்கிறது. சாதூரியமான பேச்சினாலும், நயவசனிப்பினாலும் ஒரு கூட்டம் மக்களை ஆதாயப்படுத்தி, சபையின் மக்களை ஆட்கொண்டு (நிக்கொலாய் மதஸ்தரின் கிரியை) தேவனுக்கும் விசுவாசிகளுக்கும் இடையே ஒரு ஆசாரியத்துவத்தை உண்டாக்கி, விசுவாசிகளை அடிமைப்படுத்தி, அவாகளை ஆட்கொள்ளுகிறார்கள். பின் தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்துக்குரிய செய்திக்குப் பதிலாக தங்களுடைய பாரம்பரிய உபதேசங்களை மக்கள் மீது திணித்து, தேவனுடைய வார்த்தையை அவமாக்குகிறார்கள். இதற்கு வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேலும், புரசவாக்கம் பாஸ்டர் அரவிந்தகோஸ் விதிவிலக்கு அல்ல. விசுவாசிகளும் இஸ்ரவேல் ஜனங்களைப் போன்று கர்த்தர்/பரிசுத்தஆவியின் வழிநடத்துதலை நிராகரித்து தங்களை வழிநடத்த மனிதர்களை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். மேற்கூறிய இரு பாஸ்டர்களும் எனக்கு சில உதவிகள் அவ்வப்போது செய்திருக்கிறார்கள். அவைகளை நான் மறக்க முடியாது. அந்த உதவிகளுக்காக நான் அவர்களின் தகாத உபதேசங்களுடன் இணைந்துபோக முடியாது.

18. எனது ஊழியத்தின் ஆரம்பக்காலத்தில் கேரளாவில் உள்ள பாலக்காடு மாவட்டத்தில் கோழிப்பாறை என்ற இடத்தில் பல ஆத்துமாக்களை இக்காலத்துக்குரிய செய்திக்குள் வழிநடத்த கர்த்தர் கிருபை செய்தார். 40க்கும் மேற்பட்டவர்கள் கத்தோலிக்க சபையிலிருந்து வெளிவந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றனர். சபை உருவாகியது. ஆனால் பணபலம் கொண்ட ஒரு சகோதரன் சபையில் முதன்மையாயிருக்க விரும்பி, எனக்கு விரோதமாய் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, சபையை தன் பக்கம் திருப்பினான். இந்த சகோதரனே அன்று சபை உருவாக மிகப்பிரயாசப்பட்ட சகோதரனுமாய் இருந்தார். இனி சகோ.காலேப் யோசுவா நமக்குத் தேவையில்லை, நமக்கு இக்காலத்துக்குரிய செய்தி கிடைத்துவிட்டது, செய்தி புத்தகங்கள் கிடைத்துவிட்டன, சத்தியத்தை அறியும் அறிவை அடைந்து விட்டோம்; ஆதலால் இனி காலேப் யோசுவா தேவையில்லை என்றார். ஆனால் சபை பாஸ்டர் ஒருவர் மட்டும், நான் சகோ.காலேப் யோசுவாவை இழக்கத் தயாரில்லை. கர்த்தர் அவரைக் கொண்டு நம்மை சத்தியத்துக்குள் வழிநடத்தினார், நடத்திக்கொண்டிருக்கிறார், இனியும் நடத்தவேண்டும் என்றார். ஆதலால் நான் அவரை விட்டு விலகத் தயாரில்லை என்று கூறி அவர் மட்டும் என்னைப் பற்றிக்கொண்டார். மற்ற அனைவரும் என்னைவிட்டுப் பிரிந்துசென்றனர். முடிவில் சபை பாஸ்டர் மட்டும் என்னுடன் தனித்து நிற்க, மற்றவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தனியாகச் சபை கூட ஆரம்பித்தனர். ஆம், பாஸ்டர் மட்டும் என்னுடன் சகோதர சிநேகத்தில் உறுதியாக இருந்து கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக என்னுடன் ஐக்கியம் கொண்டுள்ளார். எங்கள் சகோதர சிநேகம் நீடித்து வருகிறது. நாங்கள் இருவரும் வெளியே வந்தவுடன், சமயம் பார்த்துக்கொண்டிருந்த சாத்தான் பிரிந்து சென்றவர்களுக்குள் புகுந்தான். அந்த சபை முற்றிலுமாக கிறிஸ்து பிரன்காம் உபதேசத்துக்குள் சென்று பாழாய்ப் போனது. இங்கு பாஸ்டர் சகோதரன் 40 பேரை விட்டு வெளியே வந்து என்னைப் பற்றிக் கொண்டார். சிநேகிதன் எல்லா காலத்திலும் சிநேகிப்பான். நீதி.17:17. இதற்கு எதிர்மாறான ஒரு சம்பவத்தையும் இங்கு எழுத வாஞ்சிக்கிறேன்.

19. குறைந்தபட்சம் எட்டு ஆண்டுகளாக என்னுடன் ஐக்கியப்பட்டு, தூர தேசத்திலிருந்து வரும் நற்செய்தி (ஸ்ரீவைகுண்டத்திலிருந்து சென்னைக்கு) விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம் (நீதி.25:25) என்று கூறி என்னை வரவேற்று, ஒரு சில ஆத்துமாக்களைக் கொண்டு சபை நடத்தி வந்த சென்னை, ஆவடி பாஸ்டர் ஆமோஸ் பாஸ்கரன், ஒரு கூட்டம் முன்னாள் கிறிஸ்து பிரன்காம் விசுவாசிகள் வந்தவுடன், தசமபாகம், காணிக்கை வரவு அதிகரித்தது. உடனே என்னிடம், நீங்கள் கடிந்துகொண்டு உபதேசிப்பதை என் சபையார் விரும்புவதில்லை, ஆதலால் கொஞ்சம் அனுசரித்துக் கொள்ளுங்கள் எனக் கூற, நான் அனுசரிக்கத் தேவையில்லை, நீர் யார் என்பதை அறியவேண்டி வேளை வந்தது அறிந்து கொண்டேன் எனக் கூறி வெளியே வந்தேன். பாருங்கள், முந்தின பாஸ்டரின் சகோதர சிநேகம் மாயமற்றதாகவும், பிந்தின பாஸ்டரின் சகோதர சிநேகம் யூதாசின் சகோதர சிநேகம் போல் மாயமுள்ளதாக இருக்கக் கண்டேன். பாசம் என்றும் நேசம் என்றும் வேஷம் போட்டாயே, சந்தர்ப்பவாதியே உன்னை, யூதாசை நண்பனே என்று அழைத்தவர் முன்னில் நிறுத்தியே, ஜெபிக்கிறேன் நண்பனே! உனக்காய் ஜெபிக்கிறேன் மனிதா!

20. கேயாசின் சகோதர சிநேகத்தைப் பாருங்கள். இவன் எலிசா தீர்க்கதரிசியின் வேலைக்காரன். சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வார்த்தையின்படியே யோர்தான் நதியில் ஏழு தரம் மூழ்கி, தன் குஷ்டரோகம் ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி சுத்தமானான். இதனால் தேவனுடைய மனுஷனுக்கு காணிக்கைகளைக் கொடுத்தான். எலிசா உண்மையாகவே ஒரு தேவனுடைய மனுஷன். அவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்த கள்ள, கபடமுள்ள வேலையாள் அல்ல. ஆதலால் இலவசமாகப் பெற்று இலவசமாகக் கொடுத்த குணமாக்கும் வரத்துக்காக காணிக்கைப் பெற்றுக்கொள்ள மறுத்தான். ஆனால் இன்று இக்காலத்துக்குரிய செய்தியில் குணமாக்கும் வரம் கிரியை செய்யாதா, அதன் பலனாகக் காணிக்கைக் கிடைக்காதா என ஏங்கித் தவிக்கும் பாஸ்டர்கள் நிறைய பேர் உண்டு. இவர்கள் கிரியைகளிலிருந்து, இவர்கள் கனிகளிலிருந்து, இவர்கள் பேலியாள் மக்கள் என்பதை ஆவிக்குரியவர்கள் புரிந்துகொள்ளலாம். ஆக எலிசா காணிக்கையை வாங்க மறுக்க. அவன் வேலைக்காரனாகிய கேயாசி, நாகமான் பிறகே ஓடிச்சென்று, காணிக்கைகளைப் பெற்று வருகிறான். இவ்வாறாக எலிசாவினிடத்தில் அவன் தன் மாயமான சிநேகத்தை வெளிப்படுத்தி, அதன் பலனாக குஷ்டத்தைப் பெற்றுக்கொண்டான். 2ராஜா 5வது அதி.

21. இந்நாட்களில் கேயாசின் சகோதரர்களான சில பாஸ்டர்கள், காணிக்கை, தசமபாகத்துக்காக சபைகளை உடைக்கின்றனர். சிலர் சபை விசுவாசிகளிடம் சென்று பாருங்கள் உங்கள் பாஸ்டர் இதுவரை உங்களுக்காக உபவாசம் செய்யவில்லை, உங்களுக்காக அவர் பல மணி நேரங்கள் ஜெபிக்கவில்லை. அவரால் உங்கள் வியாதி இன்னும் நீங்கவில்லை, உங்கள் கடன் பிரச்சனைகள் தீரவில்லை. ஆதலால் அவனை வெளியே தள்ளுங்கள். என் சபையில் வந்து ஐக்கியங்கொள்ளுங்கள். உங்களுக்காக நான் வாரத்தில் மூன்று நாட்கள் உபவாசம் எடுத்து ஜெபித்து, உங்கள் வியாதியிலிருந்து, கடன் பிரச்சனைகளிலிருந்து விடுதலை கிடைக்கச் செய்வேன் எனக் கூறி சபையை உடைக்கிறதைக் காண்கிறேன். இந்த பேலியாள் மக்களையும் நம்பி ஒருகூட்டம் ஜனங்கள், அரசனை நம்பி புருஷனை கைவிட்ட நிலையில் இருக்கிறார்கள். அந்தோ பரிதாபம்!

22. என்னை, கன்னியாகுமரியில் ஒருமுறை ஒரு சகோதரர் அழைத்தார். அங்கு சென்ற என்னிடம் சகோதரனே, நான் இக்காலத்துக்குரிய செய்தியின் விசுவாசி. என் வீட்டில் சபைக்கூடுதல் நடக்கிறது. இன்னார் வந்து சபை நடத்திச் செல்கிறார். அவரால் எனக்கு விடுதலையில்லை. எனக்கு 5/6 லட்சங்கள் கடன் உண்டு. இது தீர வேண்டும். நீங்கள் ஜெபித்து, தேவனுடைய வார்த்தையை எனக்குக் கூறுங்கள் என்றார். நான், என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலி.4:19) என்றேன். பூ! இவ்வளவுதானா! நான் உங்களால் எனக்கு விடுதலை கிடைக்கும் என நினைத்தல்லவா அழைத்தேன். நீங்கள் என்றால் என் குறைவு மகிமையில் நிறைவேற்றப்படும் எனக் கூறுகிறீரே எனக் கூறி அங்கலாய்த்துக்கொண்டார். இவ்வாறாக ஜனங்கள் இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இன்றைய

பாஸ்டர்களால் வழிநடத்தப்பட்டு, அவர்களை எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதவிக்கப்பட தக்கவர்களாக்கி விடுகிறார்கள். (1கொரி.15:19)

23. நம் மத்தியிலுள்ள சகோதர சிநேகம் சிதைவதற்கு முக்கிய காரணம் உபதேசங்களில் காணப்படும் வேற்றுமை. சாத்தான் கள்ள, கபடமுள்ள அவனுடைய வேலையாட்களைக் கொண்டு சபைக்குள் பற்பல மாறுபாடான உபதேசங்களைக் கொண்டுவந்து சகோதரர்கள் மத்தியில் பிரிவினைகளைக் கொண்டு வருகிறான். உதாரணமாக தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்காம் மூலம் தேவன் இக்காலச் சபைக்குக் கொடுத்த செய்தியில் விசுவாசிகள் வளர்ந்துவருகிற வேளையில் இவர்களுக்கு மத்தியிலுள்ள சகோதர சிநேகத்தை, ஐக்கியத்தைக் கெடுக்க பற்பல மாறுபாடான உபதேசங்களை அவன் ஊழியக்காரர் மூலமாக கொண்டு வருகிறான். உதாரணமாக

அ) சகோ.பிரன்காம் - கிறிஸ்து என்ற உபதேசம்.

ஆ) 1963ல் எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்துவிட்டது. இதை இதுவரை நாம் அறியாமல் இருந்தோம். இப்பொழுது அறிந்துகொள்ளும்படி நம்முடைய மனக்கண்கள் திறக்கப்பட்டது. ஆதலால் இனி இராப்போஜனம் தேவையில்லை , ஞானஸ்நானம் தேவையில்லை, கால்களைக் கழுவும் சடங்காச்சாரம் தேவையில்லை என்கிற உபதேசம்.

இ) இப்பொழுது நாம் 1000 வருடம் அரசாட்சியில் இருக்கிறோம் என்கிற உபதேசம்.

ஈ) யோவான் விழுந்து வணங்கிய தூதன் (வெளி.19:10, 22:8,9) சகோ.பிரன்காம் தான் என்னும் உபதேசம்.

உ) பெண்கள் சுடிதார் அணியக் கூடாது என்கிற உபதேசம்.

ஊ) பெண்கள் தலைமுக்காடு அவர்கள் நீண்ட தலைமயிர் அல்ல, மாறாக அவர்கள் சேலை முந்தாணை/தொப்பி, அதாவது அவர்கள் தங்கள் தலையை ஏதாவது ஒரு வஸ்துவைக் கொண்டு மூடிக்கொள்ள வேண்டும் என்கிற உபதேசம்.

எ) ஒரு ஆண், ஒரு பெண்ணுக்குத் தங்கள் திருமண வேளையில் செய்துகொண்ட நல்மனசாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளமாக ஆண், பெண்ணுக்கு மோதிரம்/தாலி அணியக்கூடாது என்கிற உபதேசம்.

ஏ) சபை கூடும் இடத்தில், ஜெபவேளையில் அனைவரும் எழுந்துநின்று ஜெபிக்க வேண்டும், முழங்காற்படியிட்டு ஜெபிக்கக் கூடாது என்கிற உபதேசம்.

ஐ) Hofmann இயேசு தனது 33வது வயதில் என்றுக் கூறி வரைந்த படத்தை (Hofmann's Head of Christ at 33) சகோ.பிரன்காம் அது கிறிஸ்துவின் சாயலாகயிருக்கிறது என்றுக் கூறுகிறார். மேலும் அந்தப் படத்தை தன் வீட்டின் முகப்பில் தொங்கவிட்டுள்ளார். ஆதலால் நாமும் அதன்படி செய்யவேண்டும் என்கிற உபதேசம்.

ஒ) நாம் ஜெபம் பண்ணி முடிந்தவுடன், சங்.103ன் முதல் இரு வசனங்களைக் கூறி ஜெபத்தை முடிப்பது தவறு என்கிற உபதேசம்.

ஓ) கிறிஸ்து தன்னுடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார் என்று விசுவாசிக்கும் ஒரு பெண், ஞானஸ்நானத்திற்கு வரும் வேளையில் அவள் ஆபரணங்கள் எதுவும் அணிந்திருந்தால் ஞானஸ்நானம் கொடுக்கக்கூடாது என்கிற உபதேசம்.

ஔ) இந்நாட்களில் ஐந்துவகை ஊழியங்கள் கிடையாது. பாஸ்டர் ஊழியம் தவிர இதர நான்குவகை ஊழியங்கள் சகோ.பிரன்காம் ஊழியத்திலேயே நிறைவேறிவிட்டது. ஆதலால் விசுவாசிகளின் தசமபாகம் சபைப் பாஸ்டருக்கு மட்டுமே உண்டு என்கிற உபதேசம்.

ஃ) பரிசுத்தவேதாகமத்தை இனி தியானிக்க வேண்டிய தேவையில்லை, மாறாக இக்காலத்துக்குரியச் செய்தியைத் தியானித்தாலே போதும் என்கிற உபதேசம்.

இவ்வாறாக பற்பல மாறுபாடான உபதேசங்களை சபைக்குள் நுழைத்து, சகோதரர்கள் மத்தியில் பிரிவினைகளை உண்டு பண்ணுகிறார்கள்.

24. பிரியமானவர்களே இப்படிப்பட்ட போதனைகள் உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல. உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான். உங்களைக் கலக்குகிறவர்கள் தரிப்புண்டு போனால் நலமாயிருக்கும். சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள். தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை. கலா.5:8,10,12,13; 2தீமோ.2:9. நீங்கள் சுயாதீன முடிவு எங்கும், எதிலும் எடுங்கள். மனுஷர்களுக்கு அடிமைகளாகாதீர்கள். பாஸ்டர், பாஸ்டர் எனக் கூறி ஒரு மனிதனை நம்பி மோசம் போகாதீர்கள்.

25. நான் இந்தச் செய்தித் தொகுப்பை எழுதி முடித்து, டைப்புக்கு செல்ல ஆயத்தமாயிருந்தேன். ஏப்ரல், 8ம் தேதி இரவு எனக்கு சென்னையிலிருந்து ஒரு சகோதரர் போன் பண்ணி சுமார் அரைமணி நேரம் ஒரு உபதேசத்துக்கடுத்தக் காரியத்தைப் பேசிக்கொண்டிருந்தார். அவர் என்னிடம் கூறியதாவது: சகோதரனே வெளி.19:10; 22:8,9ல் கூறப்பட்ட அந்த தூதன் தீர்க்கதரிசியாகிய பிரன்காம் தான் என்ற உபதேசத்தில் தமிழ்நாடு மூழ்கிக்கிடக்கிறது. சென்னையில் நான் மட்டும் தான் இந்த உபதேசத்துக்கு எதிராயிருப்பேன் போல் தெரிகிறது. சகோதரனே இந்த உபதேசத்து ஆதரவாளர்கள், தீர்க்கதரிசி, யோவானைக் குறித்து: இவன் சபைக்கு முன் அடையாளமாக இருக்கிறான் என்கிறாராம். யோவான், சபைக்கு முன்னடையாளமாக இருப்பதினால், யோவானுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடு கொடுத்தது தீர்க்கதரிசியாகிய பிரன்காமாகத் தான் இருக்க வேண்டும், ஏனென்றால் சபைக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றி கொடுத்த வெளிப்பாடுகளை விவரித்துக் காண்பித்தது இவர் தான். இவருக்குத் தான் தேவ இரகசியம் வெளிப்படுத்தப்பட்டது. ஆதலால் அவர் தான் அந்த தூதன் என்கிறார்கள். சுகோதரனே எனக்கு இது ஒரே குழப்பமாக இருக்கிறது என புலம்பினார்.

26. நானோ, சகோதரனே நாம் மெஜாரட்டியை சார்ந்து செல்லவேண்டும் என்றத் தேவையில்லை. சில சமயங்களில் மெஜாரட்டியும் தேவனுடைய வார்த்தைக்கு புறம்பாக இருக்கலாம். அதற்கு திருஷ்டாங்கமாக 1ராஜா.22 அதி. தியானியுங்கள். அங்கு கர்த்தருடைய வார்த்தையை விசாரிக்க ஆகாப் ராஜா ஏறக்குறைய 400 தீர்க்கதரிசிகளைக் கொண்டு வந்தான். அவர்கள் ஒருமனப்பட்டு, கர்த்தர்

ராமோத்தை உமது கையில் ஒப்புக்கொடுப்பார், ஆதலால் யுத்தத்திற்குப் போம் என்று கூறினார்கள். யோசபாத்துக்கு இதில் திருப்தி இல்லை. ஏனென்றால் அவன் தேவனுடைய மனுஷன். இவன், கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் வேறே யாராகிலும் இங்கே இருக்கிறார்களா என்று கேட்க, மிகாயா இன்னும் ஒருவன் இருக்கிறான் என்று கூற, அவன் அழைக்கப்பட்டான். அவனோ இஸ்ரவேலெல்லாரும் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல மலைகளிலே சிதறடிக்கப்பட்டதைக் கண்டேன் என்றான். முடிவில் இவன் கூறியவிதமாகவே நடந்தது. ஆதலால் மெஜாரிட்டியானவர்களின் உபதேசமாகயிருக்கிறதே எனக் கூறி கவலைப்பட வேண்டாம் என ஆறுதல் கூறினேன்.

27. மேலும், எலியா தீர்க்கதரிசி தான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன் என்று நினைத்தான். ஆனால் கர்த்தரோ பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத 7000 பேரை எனக்காக மீதியாக வைத்தேன் என்றார். ரோ. 11:2-4. ஆதலால் நீங்கள் மட்டும் தான் என்ற உணர்வும் வேண்டாம். தேவன் தம்முடைய பிள்ளைகளை ஏராளமாக வைத்திருக்கிறார் என்று கூறி சாந்தப்படுத்தினேன்.

28. அன்று இரவே, யோவான் சபைக்கு எடுத்துக்காட்டாக இருந்தான் என்று தீர்க்கதரிசி கூறிய பகுதிகளை எடுத்து தியானித்தேன். **இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல்** பாகம் 2, பக்கம் 957ல் பத்தி 125ம், பக்கம் 971ல் பத்தி 175,176ம், பக்கம் 973 பத்தி 181ம் இது குறித்து தீர்க்கதரிசி கூறியிருப்பதைக் கண்டேன்.

29. பத்தி 125 என்ன கூறுகிறது? சபைக்காலம் முடிவடைந்தவுடனே, யோவான் எடுத்துக்கொள்ளப் பட்டதானது, லவோதிக்கேயா சபைக்காலம் முடிவடைந்தவுடனேயே எடுத்துக் கொள்ளப்பட்ட சபைக்கு முன்னடையாளமாக இருக்கிறது. இந்த சபைக் காலத்திற்கு பிறகு எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது. யோவான் மேலே போனது போல, சபையும் தேவனுடைய சமூகத்திற்கு மேலே போகிறது.

30. பத்தி 175 என்ன கூறுகிறது? பத்மு தீவில் இருந்த யோவான், சபைக்கு வெளிப்படுத்தலைக் கொண்டு வந்தவன் ஆவான்; இவன் **இங்கே** ஏறி வா என்று அழைக்கப்பட்டு, மகிமைக்குள் எடுத்துக் கொள்ளப்பட்ட சபைக்கு முன்னடையாளமானவனாக இருக்கிறான்.
இவன் சபைக்கு எடுத்துக்காட்டாக இருந்தான் என்று கூறினீர்கள்.

31. பத்தி 176 என்ன கூறுகிறது? ... அவன் சபை முழுவதற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினான்.

32. பத்தி 181. மோசே, மரித்து உயிர்த்தெழும் பரிசுத்தவான்களுக்கு முன்னடையாளமாகவும், எலியாவோ மறுரூபப்படுத்தப்படும் மக்களுக்கு அடையாளமாகவும் இருக்கிறான். மோசே தான் முந்தினவன். ஏலியா இரண்டாமானவன். கடைசி நாளுக்குரிய தூதனாயிருக்கும்படி எலியா வைக்கப்பட்டிருந்தான். அவனோடும், அவனுடைய குழவினரோடும் சாகாமல் எடுத்துக்கொள்ளப்படுதல் வரும். மோசே உயிர்த்தெழுதலை பெறும் கூட்டத்தையும், எலியா மறுரூபப்படுத்தப்படும் குழுவினரையும் கொண்டு வருகிறார்கள்.

33. இங்கு யோவான் முழுசபைக்கும் எடுத்துக்காட்டு, **இங்கே ஏறி வா** என்று அழைக்கப்பட்டு, மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்பட்ட சபைக்கு முன்னடையாளமாக இருக்கிறான் என்று தீர்க்கதரிசி கூறியதைக்கொண்டு, தீர்க்கதரிசியாகிய பிரன்காம் தான் யோவானுக்கு வெளிப்படுத்தின தூதன் என்று இவர்கள் கூற துணிந்தது என்ன? இவர்கள் சபையைக் குழப்புகிறார்கள். சகோ.பிரன்காமை கிறிஸ்துவாக்கியதும், யோவானுக்கு வெளிப்படுத்தின தூதனுமாக்கியதும் அதே சாத்தானுடைய போதனை தான். இவன் விசுவாசிகளுக்கு மத்தியிலுள்ள சகோதர சிநேகத்தை, ஐக்கியத்தைச் சீர்குலைக்க இப்படிப்பட்ட உபதேசங்களைக் கொண்டுவருகிறான்.

34. வெளி.1-3 அதி. சபையைப் பற்றியது. 4வதுஅதியில் சபை எடுத்துக்கொள்ளப்படுகிறது. சபை எடுத்துக்கொள்ளப்பட்டபின் யோவான் மேலே எடுத்துக்கொள்ளப்பட்டு சபைக்காலத்துக்கு பின்பு சம்பவிக்க வேண்டியவைகளைக் காண்கிறான். இந்த சம்பவத்தைக் கொண்டு யோவான் எடுத்துக்கொள்ளப்பட்ட சபைக்கு முன்னடையாளமாக இருக்கிறான் என்று தீர்க்கதரிசி கூறுகிறார். சுபைக்கு தேவஇரகசியங்களை வெளிப்படுத்தினது தீர்க்கதரிசியாகிய பிரன்காம், ஆதலால் அவரே அந்த தரிசனங்களை யோவானுக்கு காட்சியளித்தார் எனக் கூற முடியுமா? சாத்தியமில்லாத ஒன்று. தீர்க்கதரிசி இக்காலத்துக்குரிய செய்தியில் அந்த தூதன் பற்றி எதுவும் கூறவில்லை. தனக்குத் தெரியாது எனவும் கூறிவிட்டார். ஆனால் இந்த அதிகப்பிரசங்கிகள், தங்களுக்குத் தான் அனைத்தும் வெளிப்படுத்தப்பட்டது போன்று நடித்துக்கொண்டு, அதில் ஒரு உபதேசத்தைக் கொண்டு வந்து, ஜனங்களைக் குழப்புகிறார்கள், பிரிவினைகளை உண்டு பண்ணுகிறார்கள்.

35. கீழ்கண்ட முன்னடையாளங்களைக் கொண்டு, இவர்கள் அனைவருக்கும் சகோ.பிரன்காம் தான் தூதனாக இருந்தார் எனக் கூறமுடியுமா?

அ) ஆபிரகாம் விசுவாசியாக இருந்தான். அவனிடம் தான் உடன்படிக்கையை தேவன் செய்தார். மேலும் அவன் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட குமாரனுக்காகக் காத்திருந்தான். எதிர்பார்த்துக்கொண்டும் இருந்தான். ஆமென்! அது உண்மை. ஆபிரகாம் சோதோமில் காணப்படவில்லை. **அவன் இன்றைக்குள்ள ஆவிக்குரிய சபைக்கு ஒரு அடையாளமாக இருக்கிறான். இன்றைக்குள்ள ஸ்தாபனசபைகளுக்கு லோத்து ஒரு அடையாளமாகக் காணப்படுகிறான்.** (தேவனே தமது வார்த்தையின் வாக்கியானி. பக்கம் 18,19 பத்தி 63,64)

ஆ) எந்த மனிதனும் சாராளைத் தொடமுடியாது. தேவன் வாக்குத்தத்தம் ஒன்றைச் செய்திருந்தார். **சாராள் சபைக்கு முன்னடையாளமாயிருக்கிறாள்.** உண்மையான சபை, சுயாதீனமுள்ள ஸ்திரீ, சுயாதீனமுள்ள பிள்ளை. வாக்குத்தத்தைப் பெற்று மறுபடியும் பிறந்த சபைக்கு எடுத்துக்காட்டு. (மணவாட்டி மரம் திரும்ப அளிக்கப்படுதல் பக்கம் 40, பத்தி 129,130)

இ) அந்த அழகான பெண், ரெபேக்காள்... **அவள் மணவாட்டிக்கு முன்னடையாளமாகத் திகழ்கின்றாள்.** அவள் சென்று, இதற்கு முன்பு அவள் கண்டிராத ஒருவனை விவாகம் செய்து கொள்வாளா? அது ஒரு

மகத்தான் செயல். அவள் அவனைக் கண்டதேயில்லை. அவனைக்குறித்து அவனுடைய ஊழியக்காரனின் மூலமே அவள் கேள்விப்பட்டிருந்தாள். **அவள் மணவாட்டிக்கு முன்னடையாளமாயிருக்கிறாள்.** நீங்கள் கிறிஸ்துவைப் பார்த்ததில்லை. அவரைக் குறித்து நீங்கள் அவருடைய ஊழியக்காரர்களின் மூலம் கேள்விப்படுகின்றீர்கள். நீங்கள் எல்லாவற்றையும் விற்றுவிட்டு, உங்கள் வீடுகளைவிட்டு, அவரைக் காணச் செல்கின்றீர்கள்... அவள் ஒரு தீர்மானம் செய்தாள்... **மணவாட்டிக்கு முன்னடையாளம்**. அவள் ஸ்தாபன வீட்டைவிட்டு புறப்பட்டுச் செல்கின்றாள். (பதறல் பக்கம் 33, பத்தி 95,96)

ஈ) **ஏனோக் மேலே எடுத்துக்கொள்ளப்பட்டான். அவன் மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட மணவாட்டிக்கு முன்னடையாளமாயிருக்கிறான்.** (COD 2:21, கே.ப.339, பத்தி 144)

உ) **ஆதாமின் மணவாட்டி இரண்டாம் ஆதாமின் மணவாட்டிக்கு ஒப்பானவள்.** தேவன் ஆதாமையும் ஏவாளையும் பார்த்து, **பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள்** என்று கூறினார். ஆதாமின் மணவாட்டியினால் அந்த மட்டும் காத்திருக்க முடியவில்லை. அது இனி சம்பவிக்கப்போகிற ஒரு காரியமாயிருந்தது - அது ஒரு வாக்குத்தத்தம். ஏவாள் இன்னுமாக ஆதாமின் மணவாட்டியாகவில்லை. ஏனெனில் ஆதாம் அவளோடு இன்னும் வாழ்க்கை நடத்தவில்லை; கிறிஸ்துவின் மணவாட்டியும் அவருக்கு மணவாட்டியாகவில்லை. ஏனெனில் கலியாணவிருந்து இனி சம்பவிக்கவேண்டியதாயிருக்கிறது. ஏவாள் அவசரப்பட்டுவிட்டாள். தன்னுடைய வித்தை சர்பத்தின் வித்தோடு கலந்துவிட்டாள். மரணம் என்ற ஒரு பிள்ளையை உலகத்துக்குக் கொண்டுவந்தாள். அது ஒரு தாறுமாறான பிள்ளை. அதன் பின்பு ஏற்பட்ட எல்லா பிள்ளைகளும் தாறுமாறாக்கப்பட்டவர்களே. கன்னிகையாகப் பிறந்த இயேசு கிறிஸ்துவின் சபை, பெந்தெகொஸ்தே நாளில் இயேசு கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்ட பின்பு, ரோம சபையின் நாட்களில் தாறுமாறாக்கப்பட்டது. விவாகநிச்சயம் செய்யப்பட்ட அவளுடைய சொந்த சரீரமும், வித்தும் வேறொரு மனிதனுடைய வித்தினால் நிறையப்பட்டிருந்ததை நிச்சயிக்கப்பட்ட அவள் கணவன் கண்டான். அந்தோ ஒரு அவமானம்! ஆதாமும் சரியாக அதையேக் கண்டான். கிறிஸ்துவும் அதையேக் கண்டார்.
கிறிஸ்துவின் மணவாட்டி உலகத்துக்கேற்றபடி உடை உடுத்துதல், உலக வழக்கமாய் ஜீவித்தல், பெரிய அழகான ஆலயங்களைக் கட்டிக்கொள்ளுதல் போன்றவைகளினால் கர்பவதியாகியிருக்கிறாள். இக்காரியங்களெல்லாம் அவள் யார் என்பதைத் தெரியப்படுத்துகிறது. அவள் பிசாசினால் உண்டாயிருக்கிறாள்! (உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து, இரண்டாம் பாகம், பக்கம் 12,13)

ஊ) தாவீது தன் ஜனங்களால் தள்ளப்பட்டு தப்பியோடி, ... **தள்ளப்பட்ட தாவீது இன்றைய சபைக்கு முன்னடையாளமாயிருக்கிறான் - கிறிஸ்துவுக்கு.** கிறிஸ்து இன்றைக்கு தமது சபையில் தள்ளப்பட்டவராயிருக்கிறார். (விளக்கைப் போடக்கூடிய ஒரு மனிதன் இருக்கிறார். பக்கம் 13, பத்தி 36)
யோவான் சபைக்கடுத்தக் காரியங்களை மட்டுமல்ல இஸ்ரவேலருக்கடுத்தக் காரியங்களையும் தரிசனத்தில் கண்டான். உலகத்தின் முடிவுபரியந்தம் நடக்கப்போகும் சம்பவங்கள் அனைத்தையும் காட்சியாகத் தரிசனத்தில் கண்டான். மேற்கூறிய செய்திகளில் இருந்து யோவான் மாத்திரம் சபைக்கு ஒரு முன்னடையாளம் அல்ல, ஆபிரகாம் இன்றைக்குரிய ஆவிக்குரிய சபைக்கு ஒரு முன்னடையாளம் என்றும், சாராள் சுயாதீனமுள்ள சபைக்கு முன்னடையாளம், ரெபேக்காள் மணவாட்டிக்கு முன்னடையாளம், ஏனோக் எடுத்துக்கொள்ளப்பட்ட சபைக்கு முன்னடையாளம், மோசே உயிர்த்தெழும் பரிசுத்தவானுக்கு முன்னடையாளம், எலியா மறுரூபப்படுத்தப்படும் மணவாட்டிக்கு முன்னடையாளம் என்று காண்கிறோம். அப்படியானால் இவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் காலத்தில் இடைப்பட்ட தூதன் தீர்க்கதரிசியாகிய பிரன்காம் தானா? ஏனென்றால் இவர்கள் யாவரும் சபைக்கடுத்தக் காரியங்களில் முன்னடையாளமாகயிருக்கிறார்களே! யோவான், யார் பாதத்தில் விழுந்தானோ அந்தத் தூதன் சகோ.பிரன்காம் எனத் தீவிரமாக உபதேசித்துவரும் சென்னை, வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேலுக்கும், பாஸ்டர் PMA சாமிக்கும் இது விபரமாகக் கடிதம் எழுதி, அவர்களுடைய இந்த உபதேசத்துக்கு, அவர்கள் எடுத்துக் கூறும் சான்றுகளை, ஆதாரங்களை எனக்கு எழுதி உதவும்படி கேட்டிருக்கிறேன். அவர்கள் எனக்கு எழுதி உதவி செய்வார்கள் எனவும் நம்புகிறேன்.

36. **சகோதர சிநேகம் நம்மில் நிலைத்திருக்க நாம் செய்யவேண்டியதென்ன?**
**ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனைப் பகைக்கக் கூடாது.**1யோ.2:9-11. சகோதரனை சத்துருவாக என்னக் கூடாது. 1தெச.3:14,15; 1யோ.4:20. பாருங்கள் தேவன் ஒளியாயிருக்கிறார். 1யோ.1:5. அவரோடு ஐக்கியப்பட்டு ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லி தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான். ஆதலால் பகை, விரோதம் நம் மனதில் தோன்றக்கூடாது. ஒருவன் தேவனிடத்தில் அன்பு கூறுகிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூறாமல் இருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்? ஆக ஒருவன் தன் சகோதரனிடத்தில் அன்பு கூறாவிட்டால், அவன் தேவனிடத்தில் அன்பு கூறவில்லை. மேலும் ஒருவன் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் நிருபங்களில் சொல்லிய வார்த்தைகளுக்கு கீழ்படியாமற் போனால், அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருந்து, அதே வேளையில் அவனை சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி அவனுக்குப் புத்தி சொல்ல வேண்டும் என நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம்.

37. உன்னோடு விசுவாசத்தில், நம்பிக்கையில், உபதேசத்தில் ஒருவன் ஒத்துப்போகாவிட்டாலும் அவனை நேசி. அவனை வெறுக்காதே. அவனுக்கு உபதேசம் மீண்டும் மீண்டும் பண்ணு. அவனுக்கு உன் உதவிக்கரங்களை நீட்டு. கீழே விழுந்திருக்கும் அவனை மேலே தூக்க முயற்சி செய். அவனை படுகுழிக்குள் தள்ளாதே. தேவன் அன்பாயிருக்கிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். பரிசுத்தஆவி உனக்குள் வாசம் பண்ணுமானால், நீ யாவரிடத்திலும் அன்பாய் இருப்பாய். ஆனால் இன்றோ உன் அன்பு கைக்குலுக்குவதோடு முடிந்துவிடுகிறது. உன் நிலை அந்தோ பரிதாபம்!

38. நாம் பிறரை வெறுக்காமல், நம்மை நாமே வெறுப்போம். ஒருவன் இயேசுவைப் பின்பற்ற விரும்பினால் அவன் தன்னைத் தானே வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டியவனாயிருக்கிறான். மத்.16:24. வாருங்கள், நாம் அக்கிரமத்தை வெறுப்போம். எபி.1:9. தீமையை வெறுப்போம். ரோ.12:9. வெட்கமான அந்தரங்க காரியங்களை வெறுப்போம். 2கொரி.4:2. பொய்யைப் பகைத்து வெறுப்போம். சங்.119:163. இந்த உலகத்தில் நம்முடைய ஜீவனை வெறுப்போம். யோ.12:25.

39. **சகோதரருக்குள் வாக்குவாதம் கூடாது.** ஆதி.13:8, தீத்.3:9, 1தீமோ.6:4. நான் என்னுடைய ஊழியத்தின் பாதையில் கூடியமட்டும் வாக்குவாதத்தைத் தவிர்த்துக்கொள்வேன். ஒருவருடைய காரியம் எனக்குப் பிடிக்காவிட்டால் அந்த நபரைவிட்டு ஒதுங்கிவிடுவேன். அந்த நபருடன் அதிக சவகாசம் வைத்துக்கொள்ளமாட்டேன். ஆனால் அந்த நபரை நேசிப்பேன். ஒருகாலும் அந்த நபரை வெறுக்க மாட்டேன். ஒருவன் வாக்குவாதம் செய்ய மனதாயிருந்தால் எங்களுக்கும், தேவனுடைய சபைக்கும் அப்படிப்பட்ட வழக்கமில்லை. 1கொரி.11:6. ஏனென்றால் தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது? தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது. புறம்பே இருக்கிறவர் களுக்கோ இவைகள் எல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. அவர்கள் குணமாகாத படிக்கும், பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதபடிக்கும்; அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது என வேதம் கூறுகிறது. மாற்.4:11,12.

40. ஆதலால், கர்த்தர் வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி ஒருவனுடைய மனதைத் திறக்காவிட்டால், அவர்கள் தேவனுடைய வார்த்தையின் கருத்தை அறிந்துகொள்ள முடியாது. அது அவர்களுக்குத் தோன்றாமல் மறைபொருளாயிருக்கும். லூக்.24:45, 9:45. ஆதலால் தேவனுடைய வார்த்தையைக் குறித்து யாரிடமும் வாக்குவாதம் செய்வது நல்லதல்ல. தேவனுடைய வார்த்தையைக் குறித்து, உபதேசங்களுக்கடுத்தவைகளைக் குறித்து, வெளிப்பாடுகளுக்கடுத்தவைகளைக் குறித்து நாம் ஒருவனுக்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் வாக்குவாதம் கூடாது. ஏனென்றால் நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும். 1கொரி.3:7. விளைச்சலை ஒருவன் தன் கைகளில் எடுக்க முடியாது. அது தேவனுடையது. ஆகையால் ஒருவன் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டால் கர்த்தரை ஸ்தோத்தரிப்போம், ஏற்றுக்கொள்ளாவிட்டால் அந்த நபரின் இருதயத்தை கர்த்தர் திறக்க ஜெபிப்போம். இதற்கு மிஞ்சினது பாவம்.

41. இங்கு ஆபிராமைப் பாருங்கள். அவன் லோத்திடம் நமக்குள் வாக்குவாதம் வேண்டாம். நாம் சகோதரர். ஆதலால் நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன்; நீ வலதுபுறம் போனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான். அது தான் சகோதர சிநேகத்தின் தன்மை.

42. அப்போஸ்தலனாகிய பவுலும் தீத்துக்கு எழுதும் போது வாக்குவாதங்களை விட்டுவிலகு. அவைகள் அப்பிரயோஜனமாயும், வீணுமாயிருக்கும் என்கிறான். தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, தர்க்கங்களையும், வாக்குவாதங்களையும் பற்றி நோய் கொண்டிருப்பவர்களை விட்டுவிலகு என்றே புத்தி கூறுகிறான். ஆதலால் சகோதரர்களாகிய நாம் வாக்குவாதங்களைவிட்டு விலகவேண்டியவர்களாயிருக்கிறோம்.

43. **தவறு செய்த சகோதரனை ஏழு எழுபது தரம் மன்னிக்க வேண்டும்.** மத்.21:22. மன்னிப்பு, இது ஒரு கிறிஸ்தவனுக்குரிய விசேஷலட்சணமாகும். மாற்.11:25,26, கொலே.3:13, எபே.4:32. இது மனுஷருடைய தப்பிதங்களை ஒருவருக்கொருவர் மன்னிப்பதாகும். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் பரமபிதாவும் உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிப்பார். நீங்கள் மன்னியாதிருந்தால், அவரும் உங்களுக்கு மன்னியார். மத்.6:14,15. ஆதலால் தேவன் நம்முடைய அனுதின தவறுகளை மன்னிக்க வேண்டுமானால், நாமும் மற்றவர்களுடைய தவறுகளை மன்னிக்க வேண்டும். அதுவும் மனப்பூர்வமாக. மத்.18:35.

44. சகோதரர்களாகிய நாம் நின்று ஜெபம் பண்ணும் போது, ஒருவர் பேரில் ஒருவருக்கு யாதொரு குறையுண்டாயிருக்குமானால் முதலில் அந்தக் குறைகளை அவனுக்கு மன்னிக்க வேண்டும். மாற்.11:25. அவ்வாறாக மன்னிக்காமல் நாம் நின்று ஜெபம் பண்ணிக்கொண்டிருப்போமானால் நாம் நின்று ஜெபிக்கும் இடத்தின் கூறைக்கு மேல் அந்த ஜெபம் செல்லாது.

45. மன்னிப்பு விஷயத்தில், உன் சகோதரன் உனக்கு விரோதமாய் குற்றஞ்செய்தால் அவனைக் கடிந்து கொள். அவன் மனஸ்தாபப்பட்டால் அவனை மன்னிப்பாயாக. அவன் ஒரு நாளில் ஏழு தரம் உனக்கு விரோதமாய் குற்றஞ்செய்து, ஏழு தரமும் உன்னிடத்தில் வந்து; நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனை மன்னிக்க வேண்டும். லூக்.17:3,4. நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். கொலோ.3:12,13. சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்குணமும் நம்மைவிட்டு நீங்கவேண்டும். நாம் ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு மன்னித்ததுபோல, நாமும் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும். எபே.4:31,32. சகோ.காலேப் யோசுவா மீது கசப்பும், கோபமும் இருப்பதால் தானே, அவர் இறந்துவிட்டார் என்ற வதந்தியை நம்பி மகிழ்ச்சியடைகிறீர்கள்.

46. **குற்றஞ்செய்த சகோதரனை சீர்பொருந்தச் செய்.** கலா.6:1. ஒரு சகோதரன் உனக்கு விரோதமாகச் செய்த குற்றத்தை அவனுக்கு உணர்த்து.மத்.18:15-17. குற்றஞ்செய்த சகோதரனிடத்தில் உன் பொறுமையை இழந்துவிடாது சாந்தமுள்ளவனாக அவனைத் திருத்து. என் ஊழியத்தின் பாதையில் சமீபகாலத்தில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு எழுதவிரும்புகிறேன். சென்னையில் ஒரு சகோதரன் வீட்டிற்கு ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட மணி நேரத்தில் நான் செல்லுவதாக இருந்தது. இதுகுறித்து கேள்விப்பட்ட இரு இதர சகோதரர்கள், நான் யாருடைய வீட்டிற்கு செல்வதாக இருந்தேனோ அந்த சகோதரனிடம் என் வருகை விபரம் அறிந்து, அந்த சகோதரனை மிரட்டியிருக்கிறார்கள். அதாவது சகோ. காலேப் யோசுவா எங்களைக் குறித்து அவரது செய்தித்தொகுப்பு ஒன்றில் தவறாக எழுதியிருக்கிறார். அவர் இப்படி அநேகரைக் குறித்து எழுதிவருகிறார். இதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். ஆதலால் அவர் இங்கு வரும்போது நாங்கள் அவரை அடிப்போம் என்று மிரட்டியுள்ளார்கள்.

47. அந்த சகோதரன் மிகவும் பயந்துவிட்டார். உடனே தன் தெருவில் சில நபர்களிடம், இப்படி என் வீட்டிற்கு ஒரு ஊழியக்காரர் வருகிறார், அவரை அடிக்க சிலர் திட்டமிட்டுள்ளார்கள், அப்படி சம்பவம் ஏதும் நடந்தால் உடனே எனக்கு உதவிக்கு வாருங்கள் எனக் கூறி அவர்கள் ஆதரவைப் பெற்றுள்ளார். மேலும் எனக்கு மிக்க நெருக்கமான ஒரு சகோதரனுக்கு போன் பண்ணி, சம்பவத்தை எடுத்துக்கூற, அவரும் அப்படி சம்பவங்கள் ஏதும் நடக்குமானால் எனக்கு உடனே போன் பண்ணுங்கள், நானும் ஒரு ஆட்டோவில் சில ஆட்களுடன் வருகிறேன் எனக் கூறியுள்ளார்.

48. இப்படிப்பட்ட பதட்டமான நிலையில் நான் அந்த சகோதரன் வீட்டிற்கு போய் சேர்ந்தேன். உடனே அவர் என்னிடம் விபரங்கள் அனைத்தையும், அதினிமித்தமாக அவர் செய்துள்ள ஏற்பாடுகளையும் கூறினார். அவர்கள் வரவேண்டிய நேரம் நெருங்கிவிட்டது, ஆதலால் நாம் எச்சரிக்கையாய் இருப்போம் என என்னைக் கேட்டுக்கொண்டார். உடனே நான், அவர்கள் இங்கு வரும்முன், நாம் அவர்களிடம் சென்று விடுவோம். ஆதலால் அவர்கள் இருவர் வீட்டில் யார் வீடு சமீபத்தில் இருக்கிறது, அவரது வீட்டிற்கு என்னை அழைத்துச் செல்லுங்கள் எனக் கூறி, அவரைக் கூட்டிக்கொண்டு சென்றேன். அந்த சகோதரனை சந்திக்க, மற்ற சகோதரனும் அங்கு வந்து சேர்ந்தார். இருவரையும் சந்தித்து, அவர்கள் சுகநலம் விசாரிக்க, அவர்கள் மெதுவாக நான் அவர்களைக் குறித்து எழுதிய விபரங்களை பேச ஆரம்பித்தனர். நான், என் செய்தித்தொகுப்பை அவர்களிடமிருந்து பெற்று, அவர்களுக்கு விளக்கம் கொடுத்தேன். பின் அநேக ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து அவர்கள் விளக்கம் கேட்க, நானும் வேதவாக்கியங்களிலிருந்தும், இக்காலத்துக்குரிய செய்திகளிலிருந்தும் விளக்கம் கொடுத்தேன். அவர்கள் சீர்பொருந்தினர். அவர்கள் என் மீது கொண்டிருந்த கோபம் தணிய கர்த்தர் கிரியை செய்தார். முடிவில் இருவர் வீட்டிலும் நான் ஜெபிக்க அழைக்கப்பட்டு, என் ஊழியத்திற்கு காணிக்கையும் கொடுத்து இரவு 9.30 மணி வரை என்னோடிருந்து என்னை வழியனுப்பி வைத்தனர். உண்மையிலே என்னை அடிக்க அவர்கள் திட்டம் எதுவும் தீட்டவில்லை, மாறாக அந்த சகோதரனை அப்படி சும்மா மிரட்டிச் சென்றோம், அவ்வளவு தான், ஆனால் அவர் பயந்து ஒரு பதட்டநிலையை உருவாக்கிவிட்டார் என தங்கள் நிலையைக் கூறி மனஸ்தாபப்பட்டனர்.

49. **ஒரு சகோதரன் மற்றொரு சகோதரனை ஒடுக்கக்கூடாது.** உபா.24:14,15. என்னை பலப்படுத்துகின்ற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன் எனக் கூறும் ஒரு பாஸ்டரை அறிவேன். அவர் ஒரு குடும்பத்தில் புருஷனையும், மனைவியையும் பிரித்து, தாயையும் மகளையும் பிரித்து, அக்காளையும் தங்கையையும் பிரித்து, சகோதரனையும் சகோதரியையும் பிரித்து, அந்த குடும்பத்தில் தகப்பனையும் ஒரு மகளையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு, அவர்களை அடக்கி, ஒடுக்கி ஆளுகை செய்து வருகிறதை கண்டேன். இது ஒரு பாஸ்டருடைய லட்சணமா? அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிவீர்கள் என வேதம் கூறுகிறது.

50. சென்னையிலும் சில பணவசதியுள்ள பாஸ்டர்கள், விசுவாசிகள் சில ஊழியர்களுக்கு அவ்வப்போது உதவிகள் செய்து, அவர்களை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு தங்களின் பற்பல பணிகளுக்கு அவர்களை பயன்படுத்தி வருகிறார்கள். இதென்ன? ஒரு சகோதரனை மற்றொரு சகோதரனை ஒடுக்குவதாகும். இது கூடாது.

51. **சகோதரன் நிமித்தம் நாம் நஷ்டத்தை அனுபவிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.** 1கொரி.6:7. சமீப நாட்களில் கோவையிலிருந்து ஒரு சகோதரர் எனக்கு திருவைகுண்டத்திற்கு போன் பண்ணி, சகோதரனே இன்னின்ன காரியத்தின் நிமித்தமாக தாங்கள் தயவுசெய்து கோவை வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நான் சகோதரனே, கடந்த வாரம் தான் நான் கோவை வந்து சென்றேன். மறுபடியும் கோவை வந்துசெல்ல எனக்குப் பொருளாதார வசதிகள் இல்லை. நான் மாதாமாதம் கோவை வந்து செல்கிறேன், அடுத்தமாதம் வரும்போது உங்கள் காரியமாக என்னால் முடிந்தவற்றை செய்கிறேன் எனக் கூற, No, No சகோதரனே நீங்கள் உடனே வந்தாக வேண்டும், நான் போக்குவரத்து செலவுகளை ஏற்றுக்கொள்ளுகிறேன் எனக்கூற, நானும் வேறுவழியின்றி கோவை சென்றேன். அவருடன் அவர் காரியங்களை பகிர்ந்துகொண்டேன். உங்கள் போக்குவரத்து செலவு எவ்வளவு என்று கேட்க, நான் பஸ்ஸில் வந்துசெல்ல ரூ.300/- செலவாகிறது என்று கூறினேன். முடிவில் நான் அவர்கள் வீட்டைவிட்டு கிளம்பும்போது என்னிடம் ரூ.100/- மட்டும் கொடுத்து அனுப்பினார். எனக்கு திருவைகுண்டம் திரும்பிவர பணம் பற்றாக்குறை இதை சமாளிக்க இரு விசுவாசிகள் வீடுசென்று, அவர்கள் எனக்குக் கொடுத்த காணிக்கையைக் கொண்டு எனது பயணச் செலவுகளைச் சமாளித்தேன். ஆம் பிரியமானவர்களே ஊழியத்தின் பாதையில் அநேக நேரங்களில் நஷ்டங்கள் தான் உண்டு. ஒரு பக்கம் வரவு, மற்றொரு பக்கம் செலவு, வரவு செலவை ஈடுசெய்கிறது. ஊழியம் நிறைவேறுகிறது. ஊழியக்காரர்களை தாங்க வேண்டும் என்ற மனப்பக்குவம் நம் மக்கள் மத்தியில் இன்னும் வளரவேயில்லை. இது என்னுடைய ஊழிய அனுபவம்.

52. **வசனத்தினால், நாவினால் அல்ல. கிரியையினால் நாம் ஒருவரிலொருவர் அன்புகூறவேண்டும்.** 1யோ.3:18. அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும். கலா.5:6. ஒரு சகோதரனாவது, ஒரு சகோதரியாவது அன்றாட உணவிற்கு வழிவகையில்லாமல், உடுக்க வஸ்திரமில்லாமல், தங்க போதுமான இடமில்லாமல் கஷ்டப்படும் வேளையில், சகோதரன் எனப்பட்ட ஒருவன் பங்களாவில் வசித்து, குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கார் வைத்துக்கொண்டு, குளிர்சாதன அறையில் தூங்கி எழுந்து, நீங்கள் சமாதானத்தோடே போங்கள், நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். கர்த்தர் உங்கள் தேவைகளை ஏற்ற வேளையில் சந்திப்பார், மனுஷர் மீது நம்பிக்கை வைக்கவேண்டாம், தேவன் மீது நம்பிக்கையாயிருங்கள் எனக் கூறி அவர்கள் சரீரத்திற்கு வேண்டியவைகளைா கொடுக்காவிட்டால் அதில் பிரயோஜனம் என்ன? யாக்.2:15,16.

53. எனது மூத்த மகன் ஜான்பால் ஒரு B.E.(Electronics & Communication) பட்டதாரி. மேலும் கம்ப்யூட்டரில் Master Diploma in Computer Application மற்றும் Diploma in E.Commerce உடையவன். படித்து முடித்தவுடன் வேலைவாய்ப்புக்காக அலைந்தான். அவனுக்காக கோயம்புத்தூரில் சில மாதங்கள் முயற்சி செய்தோம். எங்கு சென்றாலும் இன்னும் அவனுக்கு சில பயிற்சிகள் கொடுக்க வேண்டும், அதற்கு 6 மாதங்கள் முதல் 1 வருடங்கள் ஆகலாம், அதற்கு பயிற்சி கட்டணம் ரூ.25,000 - ரூ.40,000/- ஆகும். பயிற்சி முடிந்தவுடன் அவனுடைய தகுதியின்படி வேலைவாய்ப்புகள் கொடுப்போம் என்றனர். ஆனால் அவன் படித்த படிப்பிற்கு வேலைகொடுக்க யாரும் முன்வரவில்லை. கோவையில் என் முயற்சிகள் தோல்வியடைய சென்னையில் முயற்சி செய்தோம். சென்னையில் அவன் தங்கி வேலை வாய்ப்பு தேட எனக்கு போதுமாக பணவசதியில்லை. விசுவாசிகளில் சிலர், மாம்சத்தின்படி உறவினர்களில் சிலர் நல்ல உலகப்பிரகாரமான வசதியுடன் இருந்தாலும் அவனுக்கு உதவிசெய்ய முன்வரவில்லை. ஒரு கோடீஸ்வர சகோதரனிடம் சென்று ஐயா உங்கள் அரண்மனையில் ஒரு சிறு அறையைக் கொடுங்கள் என்றேன். தரித்திரன் கெஞ்சிக் கேட்டான். ஐசுவரியவான் கடினமாய் உத்தரவு கொடுத்தான். நீதி.18:23. ஓரிரு சகோதரர்களின் ஒத்தாசையினால் தனது காரியங்களை ஓரளவு சமாளித்தான். ஆனாலும் அவன் நிலை பரிதாபமாக இருந்தது. முடிவில் பையன் வியாதிப்பட்டான். திருவைகுண்டம் வந்து சேர்ந்தான்.

54. இந்நிலையில் நான் சென்னை வந்திருந்தேன். சென்னையிலிருந்து திரும்பும் வேளையில் ஆவிக்குரிய சகோதரன் ஒருவரை சந்தித்து பேசிக் கொண்டிருந்த சமயம், அவர் என்னிடம் சகோதரனே, எனக்கு அறிமுகமான ஒருவர் ஒரு கம்பெனியில் டிரைவராக வேலை செய்கிறார். அவரிடம் உங்கள் பையன் காரியத்தைக் கூறினால், ஒருவேளை அவர் தன்னுடைய மேலதிகாரிகளிடம் கூறி ஏதாவது உதவிகள் உங்கள் பையனுக்குச் செய்யலாம் என்றார். நானும் சரி என்று கூற, அந்த டிரைவர் சகோதரன் அழைக்கப்பட்டார். அவரிடம் பையன் விபரத்தைக் கூறினேன். அவர் எங்கள் முதலாளி மற்றும் பல அதிகாரிகள் யாவரும் கிறிஸ்தவர்கள். நீங்கள் ஊழியக்காரன் என்பதினால் எங்களது மேனேஜருக்கு ஒரு கடிதம் எழுதி பையனின் பயோடேட்டா வைத்து அனுப்பி, எனக்கு விபரம் தெரிவியுங்கள். நான் மேனேஜரிடம் பேசி முயற்சி பண்ணுகிறேன் என்றார். அன்று இரவு நான் சென்னையிலிருந்து புறப்பட்டு மறுநாள் காலை திருச்சி வந்து, பின் அங்கிருந்து இரவு புறப்பட்டு, மறுநாள் காலை திருவைகுண்டம் வந்து சேர்ந்தேன்.

55. திருவைகுண்டம் வந்தவுடன், என் உள்ளத்தில் அந்த கம்பெனி மேனேஜருக்கு கடிதம் எழுதுவதற்குப் பதிலாக முதலாளிக்கே கடிதம் எழுதி வேலைவாய்ப்பு கேட்கலாம் என்ற எண்ணம் உதிக்க அவ்வண்ணமாகவே கடிதம் எழுதி அத்துடன் எனது இரு பையன்களுடைய பயோடேட்டா மற்றும் இக்காலத்துக்குரிய செய்திப் புத்தகங்கள், கைப்பிரதிகள், எனது செய்தித்தொகுப்புகள் சிலவற்றை வைத்து அனுப்பினேன். மறுநாள் சென்னை சென்ற அந்தக் கடிதத்தை, அந்த கம்பெனியின் முதலாளி அதற்கு அடுத்தநாள் பார்க்க நேர்ந்தது. அவர் எனது கடிதத்தை பார்த்துக்கொண்டிருக்கும் வேளையில் கர்த்தர் அவர் உள்ளத்தில் கிரியை செய்ய ஆரம்பித்தார். கடிதத்தை படித்துக்கொண்டிருக்கும் வேளையிலே சென்னையிலிருந்து திருவைகுண்டத்திற்கு எனக்கு போன் செய்து, உங்கள் பையன்கள் இருவரையும் உடனே கூட்டிக்கொண்டு சென்னைக்கு வந்து என்னை சந்திக்கவும் என்று பேச, மறுநாள் நான் சென்னை புறப்பட்டுச் சென்றேன். கம்பெனி முதலாளியையும் பார்த்தேன். அவர் தனது கம்பெனி இயக்குநரை அழைத்து பையன்கள் இருவருக்கும் உடனே வேலைவாய்ப்புக் கொடுத்து மூத்தவனுக்கு ரூபாய் ஐந்தாயிரம், இளையவனுக்கு ரூபாய் நாலாயிரம் மாத சம்பளமாக போட்டுக்கொடுக்கக் கட்டளையிட்டார்.

56. மேலும் அவர், பையன்கள் தங்க என்ன வசதிகள் என்று என்னிடம் கேட்க, நான் என் மூலமாக எந்த வசதியும் இல்லை எனக் கூற உடனே தனக்கு அறிமுகமான கிராம நிர்வாக அதிகாரிக்குப் போன் செய்து பையன்கள் இருவரும் தங்க உடனே ஒரு இடம் ஏற்பாடு செய்து கொடுங்கள் என கேட்க, அவரும் தங்க மாதம் ரூபாய் ஆயிரம் வாடகைக்கு இடம் ஏற்பாடு செய்து கொடுத்து, ரூபாய் ஐந்தாயிரம் முன்பணம் செலுத்த வேண்டும் எனக் கூற அதையும் அந்த கம்பெனி முதலாளியே பொறுப்பேற்றுக் கொண்டார்.

57. இதோடு மட்டுமல்ல, மதியம் சாப்பாடு வேளை வந்தது. எனக்கும், எனது பையன்கள் இருவருக்கும் கம்பெனியில் சாப்பாடு ஏற்பாடு செய்து, சாப்பாடு பரிமாறும் பொழுது கம்பெனி முதலாளி எங்கள் அருகில் வந்து பரிமாறுவதை மேற்பார்வையிட்டு சென்றார். எங்கள் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்துகொண்டேயிருந்தது. கர்த்தர் நல்லவர் என்பதை என்னுடன் என் பையன்களும் ருசிபார்த்தார்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஒருகாலும் கைவிடுவதில்லை என்பதை பிள்ளைகள் உணர்ந்தனர். முடிவில் நான் ஜெபம் செய்ய, எனது கையில் ரூபாய் ஐநூறு காணிக்கையாகக் கொடுத்து என்னை அனுப்பிவைத்தார்.

58. பிரியமானவர்களே, நாம் வசனத்தினால் அல்ல, நாவினால் அல்ல, கிரியையினால் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூறுவோம். இப்பொழுது இந்த கம்பெனி முதலாளியிடம் இக்காலத்துக்குரிய செய்தியை பகிர்ந்துவருகிறேன். இவர் பூர்வீக தென்னிந்திய திருச்சபையை சார்ந்த கிறிஸ்தவராகயிருந்தாலும், இந்நாட்களில் அசெம்ளி ஆப் காட் சபை சென்று வருகிறார். குடும்பத்துடன் பயபக்தியுள்ளவர். புற ஜாதி தீர்க்கதரிசி வில்லியம் மாரியன் பிரன்காம் பெயரைக் கூறினால் இவருக்கு முற்றிலும் அலர்ஜியாக இருக்கிறது. ஏனென்றால் இவருடைய ஊழியத்தைக் குறித்து தவறான அபிப்பிராயங்கள் உடையவராக இருக்கிறார். இவரை இக்காலத்துக்குரிய செய்திக்குள் வழிநடத்த என் முயற்சிகள் பலனளிக்க, கர்த்தர் சகோதரனுடைய இருதயத்தைத் திறக்க ஜெபியுங்கள். ஜெபமே ஜெயம்.

59. **போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவன் அல்ல. அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே. தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்பும் அல்ல.** ரோ.14:15,17. ஒரு வேளை போஜனத்துக்காக தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப் போல் சீர்கெட்டவனாக இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். இந்நாட்களில் அநேகர் போஜனத்துக்காக சத்தியத்தை மறுதலிக்கிறார்கள். நாய் தான் கக்கினதைத் திரும்பத் திண்ணும். அதே போன்று சில காலங்கள் தீர்க்கதரிசியின் செய்தி, செய்தி; திருத்துவம் கள்ள உபதேசம், ஸ்தாபனத்தை விட்டு வெளியே வா என முழக்கம் செய்த சிலர் தற்போது ஸ்தாபனத்தைத் தஞ்சமாகக் கொண்டுள்ளார்கள். ஏன்? ஒரு வேளை போஜனத்துக்காகவே. அநேகர் மாறுபாடான உபதேசத்தை போதித்து வருகிறார்கள். ஏன்? ஒரு வேளை வன்கண்ணனுடைய ஆகாரத்துக்காக. இன்று அநேகர் புதுக்கோட்டை சகோ.ஜெயராஜ் பின் செல்கிறார்கள். ஏன்? ஒரு வேளை கள்ளப் போஜனத்திற்காக. இப்படிப்பட்டவர்கள் பிற்பாடு ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ள விரும்பினாலும் ஆகாதவர்கள் என்று தள்ளப்படுவார்கள். கண்ணீர் விட்டு, கவலையோடே தேடினாலும் மனம்மாறுதலைக் காணாமற் போவார்கள். எபி.12:16,17. இன்று சகோ. அந்தோணி ஆப்மா, சகோ.கிளாஸ் டி ஜங்க் மற்றும் சில சகோதரர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்துவிட்டால் போதும், உடனே அவர்கள் பின்னே ஒரு கூட்டம் அங்கும் இங்கும் சென்றுகொண்டேயிருக்கிறது. ஏன்? ஒரு வேளை ஆகாரத்துக்காக. இந்த ஆகாரம் கைகளின் பிரயாசத்தின் ஆகாரமல்ல மாறாக வஞ்சனையினால் வந்த கள்ள போஜனம். அது அந்தரங்கத்தில் புசிக்கும் அப்பம்.

60. **நமது சரீரத்துக்கு தேவையான போஜனத்தைப் பற்றிய போதனை என்ன?**

அ) போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால் நீ அன்பாய் நடக்கிறவனல்ல.ரோ16:15.

ஆ) உன் போஜனத்தினால் உன் சகோதரனைக் கெடுக்காதே. ரோ.14:5.

இ) தேவனுடைய இராஜ்யம் புசிப்பும், குடிப்பும் அல்ல. ரோ.14:17.

ஈ) போஜனத்தின் நிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப்போடாதே. ரோ.14:20.

உ) எந்தப் பதார்த்தமும் சுத்தமுள்ளது தான். ஆனாலும் இடறல்கள் உண்டாக்கப் புசிக்கிறவனுக்கு அது தீமையாகும். ரோ.14:20.

ஊ) மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும் மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால் அவைகளில் ஒன்றையும் செய்யாமல் இருப்பதே நன்மையாயிருக்கும். ரோ.14:21.

எ) ஒருவன் சமுசயப்படுகிறவனாய் புசித்தால், அவன் விசுவாசம் இல்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுகிறான். ரோ.14:23.

ஏ) போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது; எண்ணத்தினாலெனில், புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் ஒரு குறைவுமில்லை.

ஐ) அறிவுள்ளவனாகிய உன்னை விக்ரகக்கோவிலிலே பந்தியிருக்க ஒருவன் கண்டால், பலவீனனாயிருக்கிற அவனுடைய மனசாட்சி விக்ரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை புசிக்கிறதற்கு துணிவுகொள்ளுமல்லவா? பலவீனமுள்ள சகோதரன் உன் அறிவின் நிமித்தம் கெட்டுப்போகலாமா? பலவீனமுள்ள அவனுடைய மனசாட்சியைப் புண்படுத்துகிறதினாலே நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய் பாவஞ்செய்கிறீர்கள். 1கொரி.8:10-13.

ஒ) ஒருவனிடத்திலும் இலவசமாய் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலை செய்து சாப்பிட்டோம். நீங்கள் எங்களைப் பின்பற்றும் படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டுமென்றே அப்படிச் செய்தோம். ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது. சகோதரரே எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டுவிலக வேண்டும் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறோம். 2தெச.3:6-10.

ஓ) விசுவாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்த பொய்யர் கட்டளையிடுகிறார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாயின் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல. அது தேவவசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும். 1தீமோ.4:3-5.

ஔ) போஜன பதார்த்தங்களினால் அல்ல, கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது. போஜன பதார்தங்களில் முயற்சி செய்கிறவர்கள் பலனடையவில்லையே. எபி.13:9.

61. **சகோதரனுக்கு விரோதமாக நியாயஸ்தலம் செல்லக்கூடாது.** இது குறித்து தேவனுடைய வார்த்தை கூறுவதென்ன? உங்களில் ஒருவனுக்கு எவனொருவனோடே வழக்குண்டானால் வழக்காடும்படி பரிசுத்தவான்களிடத்தில் போகவேண்டும். அநீதிக்காரனிடத்தில் போகத் துணியக்கூடாது. ஏனென்றால் பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள். உலகம் பரிசுத்தவான்களால் நியாயந்தீர்க்கப் படுவதாயிருக்க, அற்ப வழக்குகளை நீங்களே தீர்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் நீங்கள் தேவதூதர்களையும் நியாயந்தீர்க்கப்போகிறீர்கள். ஆதலால் ஜீவனுக்கேற்றவைகளை நீங்களே தீர்த்துக்கொள்ளக்கடவீர்கள் என்கிறது. மேலும் சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டான வழக்கைத் தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா? சகோதரனோடே சகோதரன் அவிசுவாசிகளுக்கு முன்பாக வழக்காடுவது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்யாதீர்கள். அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் அநியாயத்தை சகித்துக் கொள்ளுங்கள். நஷ்டத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள் என்கிறது. இதுகுறித்து நீங்கள் 1கொரி.6:1-8 வசனங்களை தியானியுங்கள்.

62. பிரசங்கி கூறுவதென்ன? சூரியனுக்குக் கீழே நான் நியாயஸ்தலத்தைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது; நீதி ஸ்தலத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது. சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்கும் காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என்கிறார். பிர.3:16,17. பிரசங்கியினுடைய அனுபவமே என்னுடைய அனுபவமுமாயிருக்கிறது.

63. புறஜாதி தீர்க்கதரிசியாகிய சகோ.வில்லியம் மாரியன் பிரன்காம் பெயரை வைத்துக்கொண்டு கொள்ளைகூட்டம் கொள்ளையடித்துக் கொண்டு அவருடைய பெயருக்கு களங்கம் கற்பித்துக் கொண்டிருக்கிறது. வில்லியம் மாரியன் பிரன்காம் பெயரை எதற்கெடுத்தாலும் உபயோகப்படுத்தக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்தேன். கேட்கவில்லை. நியாயஸ்தலம் செல்ல தேவனுடைய வார்த்தை எனக்கு அனுமதி தரவில்லை. WBGNSல் நடக்கிற தில்லுமுள்ளுகள் எல்லாம் உங்களுக்குத் தெரிந்தது தானே. இது முற்றிலுமாக ஒரு உலகப்பிரகாரமான ஸ்தாபன அமைப்பு. இங்கு ஆவிக்குரிய காரியங்களை எதிர்பார்க்க முடியவில்லை. அரசியல்வாதிகள் திரு.காமராஜ், திரு.அண்ணாதுரை போன்ற நல்லமனிதர்கள் பெயரை வைத்துக்கொண்டு அவர்கள் பின்சந்ததியார் நாட்டைக் கொள்ளையடிப்பதை போன்ற செயலாகும் இது. இவர்களுக்கும் சகோ.பிரன்காம் பெயரை வைத்துக்கொண்டு விசுவாசிகளிடமிருந்து நன்கொடை, காணிக்கை, தசமபாகம் எனக் கொள்ளையடித்து, உல்லாசமாக வாழ்ந்து ஊர்சுற்றித் திரிகிறார்கள். ஏனோதானோ என்று செய்திகளை மொழிபெயர்த்து, பிரசுரிக்கிறார்கள். மொழிபெயர்ப்பில் தவறுகள் நடக்கத்தான் செய்யும், இது தவிர்க்கமுடியாத ஒன்று என்று இறுமாப்பாய் பேசுகிறார்கள். இவர்களுடைய கிரியைகளினால் வில்லியம் மாரியன் பிரன்காம் என்ற பெயர் தூஷிக்கப்பட்டு வருகிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட மேய்ப்பனுக்கு (பாஸ்டர்) WBGNS ல் என்ன வேலை? மூன்று பாஸ்டர்கள் இதில் மூக்கை நுழைத்துக்கொண்டு, அதன் செயல்பாடுகளை பாழாக்கி வந்தனர். இப்பொழுது மூன்றில் ஒன்று பல தில்லுமுல்லுகளைப் பண்ணி, ஒரு பெரிய தொகையைப் பெற்றுக்கொண்டு வெளியே வந்துவிட்டது. தற்போது மீதமுள்ள இரண்டும் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டு, அதனதன் ஏஜெண்டுகளை உள்ளே வைத்துக்கொண்டு தங்கள் தங்கள் ஆதிக்கத்தை செலுத்திவருகின்றனர். இந்த வகையில் பார்த்தால் VOGR பரவாயில்லை. ஏனென்றால் எல்லாமே ஒரு செல்வந்தரான விசுவாசியின் கட்டுப்பாட்டுக்குள்.

64. **சகோதரனுக்குச் சகோதரன் உதவிசெய்ய வேண்டும். ஒருவன் இவ்வுலக ஆஸ்தியுடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவஅன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?** 1யோ.3:17. நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே. உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி: நீ போய் திரும்பிவா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே. நீதி.3:27,28. என்னுடைய 24 ஆண்டுகள் ஊழியத்தின் பாதையில் இதுவரை சென்னை, சகோ.யோவேல் மூடி பரமானந்தம் சுமார் ஒரு லட்சம் வரைக்கும், ஜெர்மனி-சகோ.கெர்ட் ரோடேவால்டு சுமார் ரூபாய் ஐம்பதாயிரம் வரைக்கும், சிங்கப்பூர் சகோ.பார்த்திபன் ரூபாய் முப்பதாயிரம் வரைக்கும், ஜப்பான் சகோ.ரவி ரூபாய் பதிமூன்றாயிரம் வரைக்கும், அமெரிக்கா சகோ.சயஸ் ரூபாய் பத்தாயிரம் வரைக்கும், சென்னை பாஸ்டர் ஜான் சாமுவேல், டாக்டர் ராபர்ட் ராசைய்யா, மும்பை சகோ.தேவதாஸ், புங்கந்துறை பாஸ்டர் விக்டர் லாசர் மற்றும் பாஸ்டர் P.M.A.சாமி தலா ரூபாய் பத்தாயிரம் வரைக்கும் எனக்கு உதவிசெய்திருக்கக் கூடும் என நினைவுப்படுத்துகிறேன். இன்னும் அநேக தேவனுடைய பிள்ளைகள் அவ்வப்போது காணிக்கையாக நூறு, இருநூறு எனக் கொடுத்திருக்கிறார்கள். ஆக எனது ஊழியத்தின் பாதையில் அதிகப்பட்சமாக ரூ.750/- மாத உதவித்தொகையாகப் பெற்றிருக்கிறேன் என கணக்கில் கொள்ளலாம். நிச்சயமாக இந்தத் தொகைக்கு இணையாக நான் என் ஊழியத்தின் பாதையில் செலவும் செய்திருப்பேன் என்கிற மனச்சாட்சி எனக்கு உண்டு. சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்டவேண்டும்; சகோதரனிலும் (மாம்ச சம்பந்தமானவன்) அதிக சொந்தமாய் சிநேகிப்பவனுமுண்டு. நீதி.18:24. நான் யாவருக்கும் எப்பொழுதும், எங்கும், மிகுந்த நன்றியுள்ளவனாயிருக்கிறேன். நான் நன்றிமறக்கிறவனல்ல. ஆனாலும் ஒருவருக்கும் அடிமைப்பட்டவனுமல்ல. இது தவிர வேறு யாரும் எனக்கு உதவிகள் செய்து அவர்கள் பெயரை நான் இங்கு குறிப்பிடத் தவறியிருந்தால், அது எனது மறதியாயிருக்கும். அதற்காக என்னை மன்னியுங்கள். இவர்களில் பலருடைய ஆலோசனைகளுக்கும், கொள்கைகளுக்கும், உபதேசங்களுக்கும் நான் இசைந்து போகாதக் காரணத்தினால் என்னிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் கொண்டார்கள். பணஉதவி செய்கிறவன், பணஉதவி பெறுகிறவனை அடிமைப்படுத்துவது சூரியனுக்குக் கீழே நான் கண்ட தீங்குகளில் ஒன்றாகும்.

65. கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாய் இருக்கிறான். நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதீர்கள். 1கொரி.7:22,23. பாஸ்டர் ஜான் சாமுவேல் நினைப்பதுபோல் நான் நன்றி மறந்தவன் அல்ல. அவரை முற்றிலுமாக ஸ்தாபனஆவி ஆட்கொண்டு வழிநடத்துகிறது. அந்த ஆவியோடு என்னால் இணங்கமுடியவில்லை. ஆதலால் அவர் என்னை நன்றிமறந்தவனாகக் கருதுகிறார். அவருடைய சபையில் பெண்கள் தங்கள் தலைமயிரை தங்கள் சேலை முந்தாணையினால் மூடிக்கொண்டிருப்பதை பார்த்துக்கொண்டு, காதுகளிலும் கைகளிலும் மூக்கிலும் ஆபரணங்களை அணிந்து தங்களை அலங்கரித்து வருவதைப் பார்த்துக்கொண்டும், அவர் அந்நியஆவியினால் ஒருவர் பேசும் அந்நிய பாஷைக்கு அவர் சாதூரியமாக அர்த்தம் கூறி சபை விசுவாசிகளை முட்டாளாக்குவதைப் பார்த்துக் கொண்டும் ஒரு ஆவிக்குரியவன் எப்படி அமைதியாக இருக்க முடியும்? நிச்சயமாக முடியாது. ஆனாலும் சகோதரர்கள் எனக்குச் செய்த உதவிகளுக்கு நன்றியுள்ளவனாகவேயிருந்தேன், இன்றும் இருக்கிறேன், என்றும் இருப்பேன். இதில் ஒருக்காலும் மாற்றம் கிடையாது.

66. இதை நான் பாஸ்டர் ஜான் சாமுவேலைக் குற்றப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதவில்லை. நான் இப்படி எழுதுகிறது அவரை சிநேகியாதபடியினாலேயா? தேவன் அறிவார். கடந்த டிசம்பர் மாதம் கடைசியில் நான் எனது பையன்கள் இருவரையும் சென்னைக் கூட்டிக்கொண்டு உங்கள் இடத்தில் தங்கவருகிறேன், எங்களுக்கு இடம் கொடுங்கள் என பாஸ்டருக்கு லெட்டர் போட்டுவிட்டுச் சென்றேன். என்னை மட்டும் பொறுத்தளவில் பிரச்சனை எதுவும் இல்லை. எங்கும் நான் சென்று தங்கிக்கொள்வேன். பையன்களும் என்னுடன் இருந்தால் அவரிடம் இடம்கேட்டு எழுதினேன். சென்னை வந்தவுடன் பாஸ்டரை சந்தித்துப் பேசினேன். அவர் கம்பெனியில் வேலை செய்கிறவர்கள் தங்கும்

இடத்திற்கு நாங்கள் எங்களது உடைமைகளை தூக்கிச் சென்றோம். அவர் அதை அறிவார். நானும் எனது பையன்கள் இருவரும் இரு இரவுகள் அங்கு தங்கினோம். நாங்கள் எந்தநிலையில் தங்கியிருக்கிறோம், சாப்பிட்டோமா இல்லையா என்று ஒரு வார்த்தை கூட விசாரிக்கவில்லை. ஒரு கப் காப்பி கூட என் பையன்களுக்கு வாங்கிக் கொடுக்கவில்லை. அவர்கள் இதுதான் பாஸ்டர் சாமுவேலுடைய லட்சணமா, அவரை நாங்கள் அடையாளம் கண்டுகொண்டோம் எனக் கூறிச் சென்றனர். ஆம் அக்கிரமம் மிகுதியானதினால் அவருடைய அன்பு தணிந்து போயிற்று. அவர் என்னைக் குறித்து என்ன நினைத்தாலும் நான் சென்னை செல்லும் சமயம் கூடியமட்டும் அவரைப் பார்க்காமல் செல்வதில்லை. ஏனென்றால் அவருடைய அன்புக்கும், என்னுடைய அன்புக்கும் வித்தியாசம் உண்டு. என்னுடைய அன்பு சகலத்தையும் சகிக்கும். ஆனால் ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாய் இருந்தும், அதை செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும். யாக்.4:17.

67. இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் என்பவர்கள் மத்தியில், பணம் இருக்கிறவர்களைச் சுற்றி, சுற்றி ஈ மொய்க்கிறது. வெளிநாட்டுச் சகோதரன் வந்தால் தமிழ்நாடே அவரைக் காண வந்துவிடுகிறது. ஆனால் உள்ளூர் சகோதரனைக் கண்டால், கண்டும் காணாதது போல் ஒதுங்கிப் போய்விடுகிறார்கள். காணச்சென்ற சகோதரன் வீட்டில் இருந்தாலும், இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் என்னிடம் பணம் இல்லாவிட்டாலும் என்னை நேசிக்கும் ஒரு இனத்தான், ஒரு நண்பன், ஒரு சகோதரன் உண்டு. அவர் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து.

68. நான் என்னிலுள்ள கிறிஸ்துவினுடைய சத்தியத்தைக் கொண்டு எழுதுகிறேன். நான் உங்களில் எவ்வளவு அதிகமாய் அன்புகூறுகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூறப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாவுக்காகச் செலவுப் பண்ணவும், செலவுப் பண்ணப்படவும் விரும்புகிறேன். 2கொரி.12:15. கடந்த 24 ஆண்டுகளாக நான் என் சுயநலம் கருதாமல், அவ்வப்போது கர்த்தர் என் கரங்களில் கொடுக்கும் வருவாயைக் கொண்டு, நானும் எனது மனைவியும் எனது பிள்ளைகளும் கர்த்தருக்குள் எந்த சூழ்நிலையிருந்தாலும் மனரம்மியமாக வாழ்ந்துகொண்டு, கர்த்தர் கொடுத்த உக்கிராணப்பொறுப்பை உண்மையும், உத்தமுமாகச் செய்துகொண்டு; எதிர்ப்பவர்கள் மத்தியில், கஷ்டங்கள் மத்தியில், பிரச்சனைகள் மத்தியில் சோர்வடையாது உங்கள் ஆத்துமாக்களுக்காக அவ்வப்போது ஆவிக்குரிய செய்தித்தொகுப்புக்களை எழுதிக்கொண்டும், வாசல்கள் திறக்கும் இடங்களுக்குச் சென்று இக்காலத்துக்குரிய செய்திகளைப் பிரசங்கித்து, கடிந்து கண்டனம் பண்ணி, புத்தி சொல்லி கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய தகுந்தப் போதனைகளைக் கொடுத்து வருகிறேனேயன்றி உங்களிடத்தில் யாதொரு புகழ்ச்சியையும் எப்பொழுதும் தேடினதில்லை.

69. ஊழியத்தின் பாதையில் பொருள் சம்பாதிக்க என்றுமே என் மனம் இடம்கொடுத்ததில்லை. ஊழியத்தின் பாதையில் பணம் சம்பாதித்து எனக்கென்று ஒரு அடி நிலம் வாங்கினதில்லை, எனக்கென்று ஒரு குடிசைக்கூட கட்டினதில்லை. விசுவாசிகளை மயக்கி, வசீகரப்படுத்தி எனக்கென்று ஒரு குருப் ஆதாயப்படுத்தவில்லை. ஏனென்றால் நான் யாரையும் எனக்கு அடிமைப்படுத்த விரும்பினதில்லை. விசுவாசிகள் யாவரும் சுயாதீனர்களாயிருக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். (கலா.5:14) ஏனென்றால் தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை. 2தீமோ.2:9. இந்நாட்களில் சபைகளில் சில பாஸ்டர்கள் சகோ. காலேப் யோசுவாவுடன் ஐக்கியங்கொள்ளாதீர்கள், அவர் செய்தித்தொகுப்புகளைப் படிக்காதீர்கள் என பிரசங்க பீடத்தில் நின்று சபை மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். இதென்ன? ஒரு கூட்டம் ஜனங்களைத் தங்கள் கூண்டுக்குள் அடைத்து அடிமைப்படுத்த விரும்புகிறார்கள். உதாரணமாக பல்லாவரம், பாஸ்டர் தங்கமணி சபையில் உள்ள ஒரு சகோதரர் எனக்கு மிக்க நெருக்கமான ஆவிக்குரிய சகோதரர். இவரை பலமுறை பாஸ்டர் தங்கமணி சந்தித்து, என்னை அவருடைய வீட்டில் வரவேற்க்கக்கூடாது, என்னோடு எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது எனக் கூறியும், அவர் பாஸ்டருக்கு அடிமையாகாமல், பாஸ்டருடைய கட்டளையை நிராகரித்து, என்னோட ஐக்கியங் கொண்டுள்ளார். ஏனென்றால் நாம் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம் என 1யோ.1:7ல் வாசிக்கிறோம். இது ஆவியானவரால் உருவாக்கி ஐக்கியமாகயிருப்பதால் இந்த ஐக்கியத்தைப் பிரிக்க ஒருவராலும் கூடாது. பிரியமானவர்களே, நீங்களோ சுயாதீனராயிருங்கள். உங்கள் பாஸ்டருக்கு அடிமைகளாகாதீர்கள். நான் வெளிநாட்டிலிருந்து வரும் எந்த நபருக்கும் வால்பிடித்துக் கொண்டு ஊர் சுற்றவில்லை. அவர்கள் போடுகிற எலும்புத் துண்டை ஓடிச் சென்று நாய் போன்று கவ்வவுமில்லை. பணப்பற்றாக்குறை நேரங்களில் வசதியுள்ள சகோதரர்களிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வேன். அவர்கள் கொடுப்பதில் திருப்தியடைந்து என் காரியத்தை சமாளித்துக்கொள்வேன். நான் செல்லும் இடங்களில் எல்லாம் மனுஷர் கண்களில் தயவு கிடைக்கத்தக்கதாக கர்த்தர் அநுக்கிரகம் செய்கிறார்.

70. அன்று முதல் இன்று வரை விசுவாசிகளுக்கு தவறான உபதேசத்தை, கள்ள கபடமுள்ள வேலையாட்களை சுட்டிக்காட்டி எச்சரித்து, செம்மையான வழியை சுட்டிக்காட்டி வருகிறேன். இக்காலத்துக்குரியச் செய்திகளைப் பிரசங்கித்து வருகிறேன்.

71. 1978 முதல் 2002 வரை என் ஊழியத்தில் யாரும் எனக்கு தசமபாகம் கொடுத்ததில்லை. அமெரிக்காவைச் சார்ந்த சகோ.சார்லஸ் சயஸ் மும்பையில் என் இல்லத்தில் தங்கிய நாட்கள் உண்டு. அவர் இந்தியாவில் இருந்த காலத்தில் எனக்கு ஒரு டாலர் பணம் கூட கொடுத்தது கிடையாது. எனக்கு ஒரு ஷேவிங் ஸ்டிக் (Shaving stick) கொடுத்தது ஞாபகம் இருக்கிறது. அவர் அமெரிக்கா சென்று பல ஆண்டுகள் கழித்து எனக்கு 300 டாலர்கள் (சுமார் ரூ. 9000/-) அனுப்பி இது எனது தசமபாகத்தில் தசமபாகம் என எழுதியிருந்தார். நன்றி கூறி உடனே பதில் எழுதினேன். அவர் கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார் என பதில் வந்தது. எனது பையன்கள் இருவரும் ஜனவரி 2003 முதல் வேலைக்குச் சென்றபின் தங்கள் தசமபாகங்களை எனக்கு அனுப்புகிறார்கள். அவர்கள் தங்கள் ஞானநன்மைகளை என்னிடமிருந்து பெற்றுவருகிறார்கள். நீங்கள் தசமபாகம் செலுத்தும் போது, உண்மையில் நீங்கள் எங்கு ஆகாரத்தைப் பெறுகிறீர்களோ, அங்கு தான் நீங்கள் தசமபாகம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என

கே.ப.307ல் தீர்க்கதரிசி கூறுவதால் அவர்கள் எனக்கு தசமபாகம் அனுப்புவதில் தவறில்லை என நினைக்கிறேன். இந்நாட்களில் அதைக் கொண்டு எனது ஊழியத்தைச் செய்து வருகிறேன். இந்த மாதம் முதல் வாரத்தில் தூத்துக்குடியில் வசிக்கும் ஒரு சகோதரர், தன் தசமபாகத்தை இந்த மாதம் முதல் கொடுக்க தீர்மானம் எடுத்தவர்களாகக் கூறி என்னிடம் ரூபாய் 340/- கொடுத்தார். ஆக இது தான் என் ஊழியத்தின் பாதையில் இதுவரை நான் பெற்ற தசமபாகம் மற்றும் தசமபாகத்தில் தசமபாக வரவாகும். நான் பெற்ற இந்த தசமபாகத்திலிருந்து தசமபாகம் யாருக்குச் செலுத்த என ஜெபித்து வருகிறேன். அவர் கர்த்தரைச் சுதந்தரமாகக் கொண்ட, இக்காலத்துக்குரியச் செய்தியில் உண்மையும், உத்தமுமான, செய்தியை ஏற்றுக்கொண்டதோடுமட்டுமல்ல, அதைப் பிரசங்கிப்பதோடுமட்டுமல்ல அதன்படி நடந்து ஜீவிக்கும் ஒரு ஊழியக்காரனாயிருக்க வேண்டும். கர்த்தர் வழிநடத்துகிறபடி அதை யாருக்குக் கொடுக்க வேண்டுமோ அவருக்குக் கொடுப்பேன்.

72. எனது திருமணமான முதல் இதுவரை நான் என்னுடைய மனைவிக்கு ஓரிரு சேலைகள் மாத்திரமே எடுத்துக்கொடுத்திருக்கிறேன் என நினைக்கிறேன். எனது மாமியார் உயிருடன் இருந்த காலங்கள் வரை அவர்கள், தங்கள் ஒரே மகள் என்ற காரணத்தினால் சேலைகள் மற்றும் இதர துணிமணிகள் எனது மனைவிக்கு எடுத்துக் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். ஆதலால் நான் எடுத்துக்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை. அவர்கள் நித்திரையடைந்தபின், எனது உடன் சகோதரி மகள்கள் இருவரும் பி.ஹெச்டி டாக்டரேட் பட்டம் பெற்றவர்கள், உயர்ந்த ஸ்தானங்களில் இருக்கிறார்கள். அவர்கள் சேலைகள் எடுத்தால் ஒரு சில மாதங்கள்தான் அணிவது வழக்கம். அதன்பின் அணிவதில்லை. அப்படிப்பட்ட துணிமணிகளை என் சகோதரி சேர்த்துவைத்து நான் சென்னை செல்லும் போது என்னிடம் கொடுப்பார்கள். அவைகளை எனது மனைவியும் இரு மகள்களும் உடுத்தி வருகிறார்கள். ஆதலால் என் மனைவிக்கும், இரு மகள்களுக்கும் நான் சேலைகள் எடுக்கவேண்டிய நிலை ஏற்படவில்லை. அவர்கள் தேவைகள் எனது குடும்பத்தினரால் சந்திக்கப்படுகின்றன.

73. என்னுடைய மூத்த சகோதரர் மகன்கள் தங்கள் திறமைகளினால் வளர்ந்துவரும் இளம் வியாபாரிகள். அவர்களும் பேண்ட், சர்ட் எடுத்தால் சில மாதங்களே அணிவதுண்டு. ஆதலால் அவர்கள் துணிமணிகளை நானும் எனது பையன்களும் உபயோகித்து வருகிறோம். சில விசுவாசிகளும், ஊழியர்களும் சில சமயங்களில் எனக்கு துணிமணிகள் எடுத்துக்கொடுத்து உதவி செய்வதுமுண்டு. இப்படியாக எங்கள் மூவருடைய துணிமணிகளின் தேவைகள் சந்திக்கப்படுகின்றன.

74. இவ்வாறாக எனது மனைவி, ஆண், பெண் பிள்ளைகளுக்கு நான் துணிமணிகளுக்கு அதிக செலவுகள் எதுவும் செய்யவேண்டிய தேவைகள் இதுவரை எனக்கு ஏற்பட்டது கிடையாது. கர்த்தர் ஏதோ ஒரு வழியில் எங்களுடைய தேவைகளைச் சந்தித்து வருகிறார். நான் எனது குடும்பத்துக்கான துணிமணிகளுக்காகவும் செலவு செய்வேனாகில் ஊழியத்தின் தேவைகளை சந்திக்க முடியாது. ஊழியத்திலும் தேவைகள் அதிகமாக இருப்பதால் துணிமணி செலவுகளைக் கட்டுப்படுத்திக்கொண்டேன். சில சமயங்களில் பிள்ளைகள் துணிமணி விஷயத்தில் முறுமுறுப்பார்கள். அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனாலும் நீங்கள் சம்பாத்தியம் பண்ணும் காலங்களில் புதிதாக துணிமணிகள் எடுத்து உடுத்திக்கொள்ளுங்கள் என அவர்களை சாந்தப்படுத்துவேன். சாப்பாடு வகையில் தாராளமாக செலவு செய்வேன். ஆடம்பரச் செலவுகள் எங்களை அனுகுவதேகிடையாது.

75. ஆடம்பரச் செலவுகளை இதுவரை என் வாழ்க்கையில் தவிர்த்தே வருகிறேன். இதுவரை எனது வீட்டில் குளிர்சாதனப்பெட்டி, டிவி, டேப்ரிக்காடர், மிக்ஸி போன்ற சாதனங்கள் எதுவும் கிடையாது. மார்க்கெட் வீட்டுப் பக்கத்திலேயே உள்ளது. அவ்வப்போது காய்கறிகள், மீன், இறைச்சி போன்றவைகளை வாங்கிக் கொள்கிறேன். நானும் என் குடும்பத்தினரும் அசைவம். சைவம் எங்களுக்கு அதிகமாகப் பிடிக்காது. அன்றன்றுள்ள தேவைகளை உடனே மார்க்கெட்டில் வாங்கிக்கொள்வதால் குளிர்சாதனப்பெட்டி ஒன்று தேவைப்படவில்லை. டிவி அறிந்த சத்தியத்தின்படி வாங்கப்படவில்லை. டேப்ரிக்காடர் சென்னை-VOGR கொடுத்தது ஒன்று உண்டு. அதைக்கொண்டு இக்காலத்துக்குரியச் செய்திகளை அவ்வப்போது கேட்டுக்கொள்ளுகிறோம். மிக்ஸி உபயோகிப்பதில்லை. அம்மியில் மசாலா அரைத்துக்கொள்ளுகிறோம். மிக்ஸியில் மசாலா அரைப்பது குடும்பத்தில் யாருக்கும் பிடிப்பதில்லை. இவ்வாறாக எனது குடும்பக்காரியங்கள் யாவும் மிகவும் எளிமையான முறையிலேயே நடக்கிறது. நான் எல்லாருக்கும் முன் மாதிரியாகவே என் வாழ்க்கையை நடத்திக் காண்பிக்கவே விரும்புகிறேன். என் குறைச்சலில் நான் இப்படி எழுதவில்லை; ஏனெனில் நானும் என் குடும்பத்தினரும் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டோம். தாழ்ந்திருக்கவும், வாழ்ந்திருக்கவும் எங்களுக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டுள்ளோம். எங்களைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எங்களுக்குப் பெலனுண்டு. எங்கள் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி எங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குகிறார்.

76. ஊழியத்தின் பாதையில் முகத்தாட்சண்யம் பார்க்காமல் சத்தியத்தை நான் அறிந்தமட்டில் தைரியமாக உபதேசித்து வருகிறேன். ஆதலால் நான் அநேகருக்குச் சத்துருவானேன். கலா.4:16. ஆனால் அது என்னை என்றும் பாதித்ததில்லை. நான் இந்தச் செய்தித்தொகுப்பை கம்ப்யூட்டரில் டைப் செய்துகொண்டிருக்கும் நாட்கள் ஒன்றில் அதாவது மே மாதம் 1ம் தேதி இரவு 7.30 மணியளவில் எனக்கு மிக்க நெருக்கமான ஆவிக்குரிய சகோதரர் சென்னை, பல்லாவரம் - சகோ.அந்தோணி தாஸ் எனது வீட்டிற்கு போன் செய்ய, நான் அவரை போனில் தொடர்பு கொண்டபோது கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன் என்றார். ஏனென்றால் அன்று சென்னை, போரூரில் சகோ.ஈசாக் சபைப்பிரதிஸ்டை வேளையில் கூடியிருந்தவர்கள் மத்தியில் திருநெல்வேலியிலிருந்து அங்கு சென்ற ஒருவர் திருவைகுண்டம் சகோ.காலேப் யோசுவா மாரடைப்பில் மரணமடைந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டது. சென்னையில் பணிசெய்து வருகிற அவரது பையன்கள் இருவரும் ஊர் திரும்பிவிட்டார்கள் என்ற வதந்தியைப் பரவச்செய்திருக்கிறார். இந்த வதந்தி பின் பலஇடங்களுக்கு பரவியிருக்கிறது. ஏனென்றால் சென்னை, நுங்கம்பாக்கத்திலிருந்தும் இரவு 9.00 மணிக்கு மேல் எனக்கு சகோ.தேவநேசன் போன் பண்ணி

விபரங்கள் கேட்டறிந்தார். கர்த்தருடைய கண்களில் கிருபைகிடைக்குமானால் கடைசி எக்காளம் தொனிக்கும் போது, அழிவுள்ளதாகிய பூமிக்குரிய கூடாரமாகிய எனது சரீரம் அழியாமையையும், சாவுக்கேதுவாகிய அது சாவாமையையும் தரித்துக்கொண்டு, மரணம் ஜெயமாக விழுங்கப்படும் வேளைக்கு காத்துக்கொண்டிருக்கிற நான் மரணமடைந்து விட்டேன் என்ற வதந்தியை பரப்பினவர் மேல் கர்த்தர் கிருபையாயிருப்பாராக. எனது மரணச்செய்தி சகோ.மோசஸ்பாபு போன்றவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்ததாம். அவர்களுடைய மகிழ்ச்சி கர்த்தரின் கண்களுக்கு முன்பாக இருக்கிறது; அவர்களுடைய வழிகளெல்லாவற்றையும் கர்த்தர் சீர்தூக்கிப் பார்க்கிறார்.

77. ஒரு காலத்தில் பல்லாவரம், பாஸ்டர் பால் சங்கரன் எனது கைகளில் குஷ்டம் பிடிக்கவேண்டும் என்று பகிரங்கமாக ஜெபம் செய்தார். ஆனால் கர்த்தரோ கடந்த 24 ஆண்டுகளாக நான் அவ்வப்போது செய்தித்தொகுப்புகளை எழுதத்தக்கதாக என் கைகளை பலப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, வலுப்படுத்தி வருகிறார். சகல துதி கனம் மகிமை அவருடைய பரிசுத்த நாமத்திற்கு உண்டாவதாக. ஆனால் ஒன்று இப்படிப்பட்ட ஜெபங்களையும் வதந்திகளையும் நான் கேட்டு சோர்ந்துபோவதில்லை. ஏனென்றால் நான் விசுவாசிக்கிறவர், என்னை அழைத்தவர் இன்னார் என்று அறிந்திருக்கிறேன். அவர் எனது நங்கூரமாக இருப்பதால் நான் அசைக்கப்படுவதில்லை.

78. **சகோதரர்கள் ஒருவரையொருவர் கடிந்து பட்சிக்கக் கூடாது. நீங்கள் ஒருவரையொருவர் கடிந்து பட்சித்தீர்களானால் அழிவீர்கள். அப்படி ஒருவரையொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.** கலா.5:15. நாம், நம்முடன் இணங்காதவர்களை அனேக வேளையில் நியாயந்தீர்க்கிறோம். கடிந்து பட்சிக்கிறோம். நாம் அப்படிச் செய்யலாகாது. நாம் ஒருவருக்கொருவர் இணைந்து போகாமல் இருந்தாலும் ஒருவரையொருவர் நேசிப்போம். ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்போம். ஒருவருடன் உபதேசத்தில், விசுவாசத்தில், நம்பிக்கையில் ஒருமனப்பாடு இல்லாவிட்டாலும் அவரை நேசிப்போம். அவர் இழந்துவிடக் கூடாது என்ற நம்பிக்கையுடன் ஜெபிப்போம். உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிக்கொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற் போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டுபோ, அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து. சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக. மத்.18:15-17.

79. ஆனாலும் விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களை கண்டிப்பாக கடிந்து கொள். தீத்.1:14. சில சபைகளில் விசுவாசிகள் ஜெபத்துக்காக பாஸ்டரிடம் சபைகூடுதல் முடிந்தவுடன் வருகிறார்கள். அவர்கள் அதற்காக ஊக்குவிக்கப்படுகிறார்கள். நான் இதை கண்டிப்பதுண்டு. ஏனென்றால் ஜெபத்துக்கு வருகிறவர்கள் விசுவாசிகள் தான். அவர்கள் விசுவாசிகளாயிருப்பதால் அவர்கள் விசுவாசம் எங்கே? விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று வேதவசனம் கூறுகிறது. கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்றும் கூறுகிறதே. இப்படியிருக்க நீங்கள் ஏன் தேவனிடத்தில் உங்களுடைய விசுவாசத்தைக் கொண்டு உங்கள் தேவைகளைக் கேட்பதில்லை. உன் விசுவாசம் உன்னை இரட்சிக்கும் என்றும் சொல்லப்பட்டுள்ளதே. ஆனால் சில பாஸ்டர்கள் விசுவாசிகள் தங்களிடம் வந்து சபைகூடுதல் முடிந்தவுடன் ஜெபித்துச் செல்வதை விரும்புகிறார்கள். இதெல்லாம் எதற்கென்றால், ஜெபித்துவிட்டு காணிக்கைக் கொடுத்துவிட்டுச் செல்வதற்காகவே. ஆக பாஸ்டர் நோக்கம் யாவும் பணம் சம்பாதிப்பதற்காகவே. ஆதலால் விசுவாசிகளே பொதுவாக பாஸ்டரிடம் ஜெபம், ஜெபம் எனக் கூறிச் செல்வதை நிறுத்துங்கள். நீங்கள் விசுவாசத்தில் வளருங்கள். நீங்கள் ஆபிரகாமின் குமாரரும், குமாரத்திகளுமாயிருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் உங்களுக்குரியதே.

80. கிறிஸ்துவுக்குள் யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால் சகோதரர்கள் ஏக சிந்தையும், ஏக அன்புள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணவேண்டும்.

81. மனத்தாழ்மையை நம் மக்கள் மத்தியில் காண்பது மிக்க அறிதாகயிருக்கிறது. முந்தியநாள் பெய்த மழையிலே நேற்று முளைத்த காளான்கள், ஓரிரு செய்திகளைப் படித்தவுடன் வருகிறவரத்தைப் பார்த்தால் மிக்கப் பரிதாபமாகயிருக்கிறது. எல்லாமே தங்களுக்குத் தெரியும் என நினைக்கிறார்கள். ஆனால் ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவன் என்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறியவேண்டிய பிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை என வேதம் கூறுகிறது. 1கொரி.8:2. பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார். 1பேது.5:5. மும்பை சகோ.டேனியல் கிறிஸ்டியானின் ஊழியத்தை கண்களால் பார்த்திருப்பீர்கள், காதுகளால் கேட்டிருப்பீர்கள். தன்னைத் தான் பெருமைப்படுத்தினார். தனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை என்றார். மும்பையிலிருந்துதான் செய்தி உலகம் முழுவதும் செல்லப்போகிறது என்றார். தன்னை பாஸ்டர், தீர்க்கதரிசி, அப்போஸ்தலன் என்று ஐந்துவகை ஊழியங்கள் அனைத்தைக் கொண்டும் அழைத்துக் கொண்டார். அதோ, அங்கே மேகஸ்தம்பம்; இதோ, இங்கே அக்கினிஸ்தம்பம் என்றார். கர்த்தர் ஊழியத்திற்கு எருசலேம் அனுப்பினார் என்றார். எங்கும் எதிலும் தன்னை மேன்மைப்படுத்தி விளம்பரங்கள் செய்தார். முடிவில், இறுமாப்பானவைகளை பேசின வாய்க்கு என்ன ஆயிற்று? வஞ்சனைகளினால் உல்லாசமாய் வாழ்ந்த வாழ்க்கை என்ன ஆயிற்று? ஆவிக்குரிய மரணம் அடைந்ததே அதன் முடிவு. அவரைச் சார்ந்தவர்கள் சிதறிப் போனார்கள். இழிவான ஆதாயத்துக்காக தகாதவைகளை உபதேசித்து முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போட்டுவிட்டு, இப்பொழுது நான் எல்லாவற்றையும் விட்டுவிட்டேன், இக்காலத்துக்குரிய செய்தியை மட்டும் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறேன் என்கிறார். இது என்ன? இந்த நிலை ஏன்? தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். பேயோரின்

குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றி சம்பாதித்த அநீதியின் கூலியை சகேயுவைப் போன்று நாலத்தனையாகத் திரும்பிக் கொடுப்பாரா? கொடுத்தால் மட்டுமே இரட்சிப்பு.

82. ஒரு மனிதனை கர்த்தர் சிறிதளவு ஆசீர்வதிக்கும்போது மூன்று முக்கியமான காரியங்களான **பணம், பெண், புகழ்** அவனைத் திரும்பவும் அவனுடைய பழையநிலைக்குக் கொண்டுவந்து விடுகின்றன. வேதத்தில் பாலாக் என்பவன் தீர்க்கதரிசியாகிய பிலேயாம் என்பவனுக்கு அதிகமானப் பணத்தைக் கொடுக்க முன்வந்தபோது, அந்தப் பணத்தின் காரணமாக பிலேயாம் தன்னுடைய வரத்தை விற்றுப்போட்டான். சிம்சோன், தெலீலாளிடம் தன்னை விற்றுப்போட்டான். அந்தப் பெண் அவனை தன் மடியிலிருத்தி, அவன் தன்னிடமுள்ள கர்த்தரின் இரகசியத்தை வெளியிடும்வரை அவனை மயக்கினாள். சவுல் புகழுக்காக தேவவரத்தை விற்றுப்போட்டான். அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். இன்னொருவரைக் காட்டிலும் தன்னை பெரியவனாக்க விரும்பி புகழுக்காக அவன் விழுந்துப்போனான்.

83. தாழ்மை தேவை. ஆனால் மாயமான தாழ்மை தேவையில்லை. நான் மீன், முட்டை, இறைச்சி சாப்பிடுவதில்லை, வாரத்தில் மூன்று நாட்கள் உபவாசம், காப்பி, டீ குடிப்பதில்லை ஆனால் பால் மட்டும் குடிப்பேன், இதெல்லாம் என்ன? மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது என்று தேவனுடைய வார்த்தைக் கூறுகிறதே. இப்படிப்பட்ட தாழ்மையைக் கொண்டு ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

**84. அன்பின் தன்மைகள் என்ன?**

1. ஒருவன் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு அவனிடத்திலிராவிட்டால், அவன் சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பான். 1கொரி.13:1.
2. ஒருவன் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்திருந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு அவனிடத்திலிராவிட்டால் அவன் ஒன்றுமில்லை. 1கொரி.13:2.
3. ஒருவன் தனக்கு உண்டான யாவற்றையும் அன்னதானம் பண்ணினாலும், தன் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும் அன்பு அவனிடத்திலிராவிட்டால் அதினால் அவனுக்கு பிரயோசனம் ஒன்றுமில்லை. 1கொரி.13:3.
4. அன்பு நீடிய சாந்தமும் தயவும் உள்ளது. 1கொரி.13:4.
5. அன்புக்குப் பொறாமையில்லை. 1கொரி.13:4.
6. அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. 1கொரி.13:4.
7. அன்பு அயோக்கியமானதைச் செய்யாது. 1கொரி.13:5.
8. அன்பு தற்பொழிவை நாடாது. 1கொரி.13:5.
9. அன்பு சினமடையாது. 1கொரி.13:5.
10. அன்பு தீங்கு நினையாது. 1கொரி.13:5.
11. அன்பு அறிவுக்கெட்டாதது. எபே.3:19.
12. அன்பு ஸ்திரீகளின் சிநேகத்தைக் பார்க்கிலும் அதிகமானது. 2சாமு.1:26.
13. அன்பு திராட்சைரசத்தைப் பார்க்கிலும் மதுரமானது. உன்.4:10.
14. அன்புக்காக ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் கொடுத்தாலும், அது முற்றிலும் அசட்டைப்பண்ணப்படும். உன்.8:7.
15. அன்பை திரளான தண்ணீர்கள் அவிக்கமாட்டாது. உன்.8:7.
16. அன்னை வெள்ளங்களும் தணிக்கமாட்டாது. உன்.8:7.
17. அன்பு சகல பாவங்களையும் மூடும். நீதி.10:12.
18. அன்பு பக்திவிருத்தியை உண்டாக்கும். 1கொரி.8:1.
19. பூரணஅன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவனல்ல.1யோ.4:18.
20. அன்பு சகலத்தையும் தாங்கும். 1கொரி.13:7.
21. அன்பு சகலத்தையும் விசுவாசிக்கும். 1கொரி.13:7.
22. அன்பு சகலத்தையும் நம்பும். 1கொரி.13:7.
23. அன்பு சகலத்தையும் சகிக்கும். 1கொரி.13:7.
24. அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும். 1கொரி.13:6.
25. அன்பு ஒருக்காலும் ஒழியாது. 1கொரி.13:8.

85. காரியத்தின் கடைத்தொகையை நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும் நான் உங்களுக்கு மீண்டும் நினைப்பூட்ட விரும்புகிறேன்.

1) சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது. எபி.13:1. சகோதரரே நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்குக் கொடுத்த புதிதானக் கட்டளை யோ.13:34,35.
2) சகோதர சிநேகத்திலே ஒருவர்மேல் ஒருவர் பட்சமாயிருங்கள். ரோ.12:10.
3) சகோதரரே நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாயிருங்கள். 1பேது.1:22.
4) சகோதரரே நாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே தேவனுடைய கற்பனையாயிருக்கிறது. 1யோ.3:23.
5) தேவனிடத்தில் அன்புகூறுகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூற வேண்டும் என்பதே கற்பனை. 1யோ.4:21.
6) தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூறாதவன், தேவனிடத்திலும் அன்புகூறுவதில்லை. ஒருவன் தான் தேவனிடத்தில் அன்புகூறுகிறேன் எனக் கூறி தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யன். 1யோ.4:20.

7) இயேசுவே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான். பிறப்பித்தவரிடத்தில் அன்புகூறுகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூறுகிறான். 1யோ.5:1.
8) தன் சகோதரனில் அன்புகூறாமல் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல. 1யோ.3:10.
9) தன் சகோதரனிடத்தில் அன்புகூறாதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான். 1யோ.3:14.
10) தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலைப்பாதகனாயிருக்கிறான். அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது. 1யோ.3:15.
11) சகோதரரே, ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலேயிருக்கிறான். தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலேயிருந்து இருளிலே நடக்கிறான். 1யோ.2:9,11.
12) தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. 1யோ.2:10.
13) சகோதரரே, சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள். 1பேது.1:22.
14) சகோதரரே, நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். 1யோ.4:7.
15) சகோதரரே அன்பில்லாதவன் தேவனை அறியான். 1யோ.4:8.
16) சகோதரரே நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். 1யோ.4:12.
17) நாம் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம். 1யோ.3:16.
18) சகோதரரே நாம் வசனத்தினாலும் நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் ஒருவரிலொருவர் அன்புகூரக்கடவோம். 1யோ.3:18.
19) சகோதரரே மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரிலொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். எபே.4:2,3.
20) சகோதரரே நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள். அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். கலா.5:13.
21) ஒருவன் இவ்வுலக ஆஸ்தியை உடையவனாயிருந்து தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு இல்லை. 1யோ.3:17.
22) உன் சகோதரனை உன் போஜனத்தினாலே விசனமுண்டாக்கினால் நீ அன்பில் நடக்கிறவன் அல்ல. ரோ.14:15.
23) நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, தேவனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறோமென்று அறிந்துகொள்ளுகிறோம். 1யோ.5:2.
24) சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுவது கர்த்தருக்கு அருவருப்பானது. நீதி.6:19.
25) சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறான். மத்.5:22.
26) சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறான். மத்.5:22.
27) சகோதரனை மூடன் என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருக்கிறான். மத்.5:22.
28) நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைப் பார்க்காதே. மத்.7:3.
29) தேவனுடைய சித்தத்தின்படி அதாவது தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதன்படி செய்கிறவர்களே ஒருவருக்கொருவர் சகோதரனும் சகோதரியுமாவர். மாற்.3:35, லூக்.8:21.
30) நீங்கள் எல்லோரும் சகோதரராயிருக்கிறபடியால் ரபீ என்றும், குரு என்றும் அழைக்கப்படாதிருங்கள் கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயும், குருவாயுமிருக்கிறார். மத்.23:8,10.
31) சகோதரர்கள் ஒருவரையொருவர் ஸ்திரப்படுத்த கடமைப்பட்டிருக்கிறார்கள். லூக்.22:32.
32) கஷ்டத்தில், ஏழ்மையில், வறுமையில், பஞ்சத்தில் வாழும் சகோதரர்களுக்கு பணஉதவி செய்து உதவவேண்டும். அப்.11:28,29.
33) நாம் யாவரும் சகோதரர்களாயிருந்தாலும், நம் மத்தியில் விசேஷித்தவர்கள் உண்டு. அப்.15:22. உதாரணமாக சுவிசேஷ ஊழியத்தில் புகழ்ச்சிப் பெற்றவர்கள் உண்டு. 2கொரி.8:18.
34) சகோதரனெனப்பட்ட ஒருவன் விபச்சாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதணைக்காரனாயாவது, உதாசீனனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால் அவனோடே கலந்திருக்கக் கூடாது. அப்படிப்பட்டவனுடனே கூடப் புசிக்கவும் கூடாது. 1கொரி.5:11. அதாவது கர்த்தருடைய இராப்போஜனப் பந்தியில் அவனுடன் பங்குக்கொள்ளக்கூடாது.
35) சகோதரனோடே சகோதரன் வழக்காடக்கூடாது. 1கொரி.6:6,7.
36) சகோதரர்கள், அவரவர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவர்கள். 1கொரி.7:14.
37) சகோதரர்களில் ஒருவரையொருவர் அற்பமாய் எண்ணக்கூடாது. 1கொரி.16:11.
38) சகோதரர்கள் சபைகளுடைய ஸ்தானாபதிகளும், கிறிஸ்துவுக்கு மகிமையுமாயிருக்க வேண்டும். 2கொரி.8:23.
39) சகோதரர்கள் ஒரே ஆவியுடையவர்களாய், ஒரே அடிச்சுவடுகளில் நடக்கவேண்டும். 2கொரி.12:18.
40) சகோதரர்கள் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருக்கவேண்டும். கலா.6:2.
41) சகோதரர்கள் நன்மை செய்வதில் சோர்ந்து போகக்கூடாது. கலா.6:9.
42) சகோதரர்கள் ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்லவேண்டும். 1தெச.5:14.
43) சகோதரர்கள் திடனற்றவர்களைத் தேற்றவேண்டும். 1தெச.5:14.
44) சகோதரர்கள் பலவீனரைத் தாங்கவேண்டும். 1தெச.5:14.

45) சகோதரர்கள் எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருக்கவேண்டும். 1தெச.5:14.
46) சகோதரர்களில் ஒருவனும் மற்றொருவர் செய்யும் தீமைக்குத் தீமை செய்யக்கூடாது. 1தெச.5:15.
47) சகோதரர்கள் யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய வேண்டும். 1தெச.5:15.
48) சகோதரர்கள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும். 1தெச.5:16.
49) சகோதரர்கள் இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும். 1தெச.5:17.
50) சகோதரர்கள் எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்ய வேண்டும். அதுவே தேவனுடைய சித்தம். 1தெச.5:18.
51) சகோதரர்கள் ஆவியை அவித்துப்போடக் கூடாது. 1தெச.5:19.
52) சகோதரர்கள் தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணக்கூடாது. 1தெச.5:20.
53) சகோதரர்கள் எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப்பிடித்துக்கொள்ள வேண்டும். 1தெச.5:21.
54) சகோதரர்கள் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலக வேண்டும். 1தெச.5:22.
55) சகோதரர்கள் ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் விட்டுவிலக வேண்டும். 2தெச.3:6.
56) சகோதரர்களே நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது, நிருபத்தினாலாவது அப்போஸ்தலர்கள் உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ள வேண்டும். 2தெச.2:15.
57) சகோதரர்களில் ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும்கூடாது. 2தெச.3:10.
58) சகோதரர்கள் முதிர்வயதுள்ளவனைத் தகப்பனைப்போலவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளை தாயைப் போலவும், பாலிய புருஷரை சகோதரரைப்போலவும், பாலியஸ்திரீகளை எல்லாக் கற்புடன் சகோதரிகளைப்போலவும் கனம் பண்ணவேண்டும். 1தீமோ.5:1,2.
59) சகோதரர்கள் உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம் பண்ணவேண்டும். 1தீமோ.5:3.
60) தேவனுடைய நாமமும் உத்தேசமும் தூஷிக்கப்படாதபடிக்கு, அடிமைத்தன நுகத்திற்கு உட்பட்டிருக்கிற வேலைக்காரர் யாவரும் தங்கள் எஜமான்களை எல்லா கனத்திற்கும் பாத்திரரென்று எண்ணவேண்டும். 1தீமோ.6:1.
61) விசுவாசிகளாகிய எஜமான்களையுடைவர்கள், தங்கள் எஜமான்கள் சகோதரராயிருக்கிறதினாலே அவர்களை அசட்டைப்பண்ணாமல், நல்வேலையின் பலனைப் பெற்றுக்கொள்ளுகிற அவர்கள் விசுவாசிகளும் பிரியமாயிருக்கிறபடியால், அவர்களுக்கு அதிகமாய் ஊழியஞ்செய்ய வேண்டும். 1தீமோ.6:2.
62) சகோதரர்கள் ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசக்கூடாது. யாக்.4:11.
63) சகோதரர்கள் தங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இதைச் செய்தால் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. 2பேது.1:10.
64) சகோதரர்களே நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். 1யோ.5:21.
65) சகோதரர்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே கிறிஸ்துவின் அவயவங்களாயும் இருக்கிறார்கள். 1கொரி.12:27.
66) சகோதரரே ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? யாக்.2:14. இரட்சிக்காது. ஏனென்றால் கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது. கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்படுகிறது. யாக்.2:20,22.
67) ஒரு சகோதரன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால் (தான் அறிந்த சத்தியத்தை, தன் விசுவாசத்தை எடுத்துக்கூறி அவர்களை சத்தியத்திற்குள் வழிநடத்தத் தவறினால்) அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருக்கிறான். 1தீமோ.5:8.
68) சகோதரர்கள் ஒருமைப்பாட்டில் தேறினவர்களாயிருக்கவேண்டும். யோ.17:23.
69) சகோதரர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருக்கவேண்டும். அப்.2:42.
70) சகோதரர்கள் அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக ஒருவருக்கொருவர் வலதுகைக் கொடுக்கவேண்டும். கலா.2:9.
71) சகோதரர்கள் சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். எபே.4:3.
72) சகோதரர்கள் அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையே நோக்க வேண்டும். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே இவர்களிடம் இருக்க வேண்டும். பிலி.2:4,5.
73) சகோதரரே நம்முடைய ஐக்கியம் ஏல்பெத்தேல் சபையோடு அல்ல, மணவாட்டிக் கூடாரத்தோடு அல்ல, கல்வாரி சபையோடு அல்ல மாறாக பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கவேண்டும். (1யோ.1:3)
74) சகோதரரே, தேவன் ஒளியாயிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். 1யோ.1:7.

சகோதரரே, நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதின இந்தப் புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுக்கொள்ளுகிறேன். இதின்படி நீங்கள் நடந்தால் மட்டுமே சகோதர சிநேகத்தில் நிலைத்திருப்பீர்கள். மற்றபடி உங்கள் சகோதர சிநேகம் விருதாவாயிருக்கும். சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது. சகோதர சிநேகம் நிலைக்கக்கடவது என்று பாடல் பாடியவர் தன் சபையில் சகோதர விரோதத்தை சகோ.காலேப் யோசுவாவுக்கு விரோதமாக பாடுவதென்ன?

86. முடிவாக, இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார் என தாவீது சங்.133ல் கூறுகிறான். ஆதலால் சகோதரரே நீங்கள் உத்தமமானவைகளை ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமாய் பெருகவும், தேவனுக்கு மகிமையும் துதியும் உண்டாகும்படி இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி, நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும்

இடறலற்றவர்களுமாயிருக்க வேண்டுதல் செய்கிறேன். என்னுடைய உள்ளம் உங்களைப் பற்றி அதிக அன்பாய் இருப்பதால் உங்களுக்கு இந்த செய்தித்தொகுப்பை எழுதுகிறேன்.

87. நாம் ஒருவரிடத்தில் உண்மையும் உத்தமுமாக இல்லாவிட்டால், தேவனிடத்தில் எப்படி உண்மையும் உத்தமுமாக இருக்கமுடியும்? பெந்தெகொஸ்தே தொடக்கத்தில் சகோதர சிநேகம் நிலைத்திருந்தது. அவர்கள் அனைவரும் எல்லாவற்றையும் பொதுவாக வைத்து அனுபவித்தார்கள். அவர்களுக்குள் விதவிதக்கொள்கையில்லை, பலப்பிரிவுள்ள பலகையில்லை, வீண்குழப்பங்கள் ஒன்றுமில்லை, தரித்திரர் செல்வர் சிறியவர் பெரியோர் ஆகிய சிறப்புமில்லை, ஆசை இல்லை, போட்டியில்லை, பொறாமையில்லை. அன்பே எங்கும் எதிலும். சகோதர சிநேகம் உன்னில் இல்லையென்றால் தேவன் உனக்குள் இன்னும் வரவில்லை.

88. தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு நீங்கள் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களை பெருகவும் நிலைத்திருக்கவும் செய்வாராக. பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் சகோதரருக்கு சமாதானமும் விசுவாசத்தோடு கூடிய அன்பும் உண்டாவதாக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்புகூறுகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக ஆமென்.

ஏப்ரல் & மே 2003.

கிறிஸ்துவின் அன்பில்,
சகோ.காலேப் யோசுவா